# உலகத் தமிழர் குரல்

# Ulaka Thamilar Kural

ஒலி ~ 23 டிசம்பர் 2004 இதழ் ~ 20

திருவள்ளுவர் ஆண்டு 2035 கலிவருடம் 5106 மார்கழி மாதம் சிலை – திங்கள் சஞ்சிகை 8

அரசியல் கலப்பற்றது NON POLITICAL

பாண்டிச்சேரி மாநாட்டு இதழ்



வெளியீடு:
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
இலங்கைக் கிளை, யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு: ரூபா 40\=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர் குரல்

ஆசிரியர், திரு. ஆ. சண்முகலிங்கம்

மார்கழி மாதம் 2004 (டிசம்பர்)

எண்ணம்

# சுனாமி - வெள்ளப் பிரளயம் இயற்கை அனர்த்தங்கள்

சமீபத்தில் மார்கழியில் வரலாறு கண்டிராத பேரழிவுகள் நடந்துள்ளன இந்த மனிதப் பேரழிவுகளில் தென்னாசியாவில் தீடீரென ஏற்பட்ட பயங்கரம் பூகம்பம் மற்றும் தொடர்ந்து வந்த கடல் கொந்தளிப்புக்களால் லட்சக்கணக்கில் மக்கள் அழிக்கப்பட்டனர். இந்தப் பேரழிவு நாசம் சுமாத்திரா, மலேசியா, பர்மா, தென்இந்தியா, அந்தமான், நிக்கோபார் தீவுகள், இலங்கை, மாலதீவுகள் போன்ற நாடுகளில் புகுந்த வெள்ளப் பிரளயத்தால் ஏற்படலாயின.

26.12.2004 ல் அன்று காலையில் சுமத்திராவுக்கு அருகாமையில் தீடீரெனத்தோன்றிய பாரிய கடல் பூகம்ப வெடிப்புக்களால் சுனாமி என்ற பெயரில் இதுவரை தற்கால உலகம் கண்டிராத கடல் கொந்தளிப்புக்கள் உக்கிரவேகங் கொண்டெழுந்து அசுரவேகத்தில் பாய்ந்து சென்று சுமாத்திரா, மலேசியா, தாய்லாந்து, அந்தமான் தீவுகள், தென்னிந்தியா, இலங்கை, மாலைதீவுகள் ஆகிய நாடுகளின் கரையோரங்களைத் தாக்கி அழிவு நாசங்களை உண்டு பண்ணிவிட்டன. இதனால் பல்லாயிரக் கணக்கில் மக்கள் வயது வேறுபாடின்றி குழந்தைகள், ஆண்கள், பெண்கள் முதியோர் என்றவாறு ஈவிரக்கமின்றி அழித்தொழிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் இந்த நாடுகளில் பெரும் எண்ணிக்கையில் குடியிருப்புக்கள் கிராமங்கள் அழிவுக்குள்ளாகி விட்டன.

தமது நாட்டில் தமிழர்கள், முஸ்லீம்கள் வாழும் வடக்கு கிழக்குப் பகுதிகளின் வடமராட்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, கரையோரக் கிராமங்களில் ஆயிரக் கணக்கில மக்கள் உயிரிழப்புக்கள் ஏற்பட்டு விட்டன. வீடுகள், குடிசைகள், கட்டிடங்கள் எனப்பல சொத்து, உடமைகள் அழிவில் சிக்கி நாசமாகி விட்டன. மனிதர்களில் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போய்விட்டனர்.

இந்த நிலையில் பலியாகி பாதிப்புக்களாகியவர்களின் உறவுகள் அகதி நிலைக்காளாகி அல்லலில் துன்பத்தில் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட இலங்கையின் கிழக்கு அம்பாறை, தென்பகுதியில் அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி போன்ற சிங்கள மக்களும், முஸ்லீம் மக்களும் வாழும் இடங்களும் சுனாமிக்கடல் கொந்தளிப்புக்களால் தாக்கி அழிக்கப்பட்டதால் அவ்விடங்களிலும் பொது மக்கள் பல ஆயிரம் பேர் காவு கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மேலும் இந்தியாவில் தமிழ் நாட்டில் நாகை மாவட்டம், புதுக் கோட்டை மாவட்டம் கன்யாகுமரி மாவட்டம் மற்றும் புதுச்சேரி மானிலப் பகுதிகளையும் கடல் கோள் தாக்கியதில் பல ஆயிரம் பேர் இறந்தும் காணமாலும் போய் விட்டனர். இதேபோல் அந்தமான், நிக்கோபார் தீவுகளில் ஏற்பட்ட தாக்குதல்களால் நமது உறவுகள் பல்லாயிரம் பேர் பலியாகிவிட்டனர்.

சுமத்திராவின் 1 1/2லட்சம் பேரும் தாய்லாந்து, மலேசியா நாடுகளில் ஆயிரக்கணக்கானோரும் சுனாமியினால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதனால் உறவுகளை இழந்த மக்கள் பெரும் தொகையினர் ஏதிலிகளாகிவிட்டனர்.

இந்த துன்ப துயரங்களில் சிக்கி இன்னலப்படும் நமது தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர்கள் 10 லட்சங்களுக்கு மேலாகி-விட்டனர். இங்கே 20 ஆண்டுகள் நடந்த போர்களால் பாதிக்கப்பட்டிருந்த தமிழ் மக்கள் மீண்டும் வடக்குக் கிழக்கில் மீண்டும் இயற்கைப் பேரழிவால் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படியாகப் பாதிப்புக்குள்ளானோர் பாடசாலைகள், கோவில்கள், நலன்புரி நிலையங்கள், அன்பர் இல்லங்கள் போன்றவற்றில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். இவர்களைப் பராமரித்துப் பாதுகாக்கும் பாரிய பொறுப்புக்கள் அரசுக்கும், சமூக சேவை அமைப்புக்களுக்கும் ஏற்பட்டுள்ளன. இதற்கான போதிய உதவி ஆதரவுகள் செய்யப்பட வேண்டியுள்ளன. இது நமது உறவுகளின் கடமைப்பாடாகவும் ஆகிவிட்டது.

கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கும் நமது மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் உலர் உணவுகள், உடைகள், போர்வைகள், மருந்துப் பொருட்கள், குடி நீர் போன்ற அத்தியாவசியமான வாழ்வாதாரங்கள் சீராக வழங்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன.

உள்ளூரில் வசதிபடைத்த பெருமக்கள், வள்ளல்கள் மற்றும் புலம் பெயர்ந்து வாழும் உறவுகள் எல்லோரும், இங்கே வாழும் பொது மக்கள் யாவரும் தம்மாலியன்ற உதவிகளை பொருட்களாகவும் நிதியாகவும் அதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் அமைப்புக்கள், செயலணிகள் மூலமாகவும் வழங்க முன்வர வேண்டும். இதன் மூலம் தமது உறவுகளு தற்போது உண்டான துன்ப துயரங்களை ஓரளவு நீக்கிட பேருதவியாக இருக்கும் என நம்புகிறோம். இதனை இன்றே செய்வோம்! நன்றே செய்வோம்!

மேலும் உலக நாடுகளில் பெரும் அனர்த்தங்களுக்குள்ளாகியிருக்கும் நமது அன்பு நெஞ்சங்களுக்கும். மற்றும் மக்களுக்கும் எமது ஆழ்ந்த மனத் துயரங்களையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மானுடத்தை மதிப்போம். மனித நேயத்தை வளர்ப்போம் அன்பே சிவம் (கடவுள்) உலகில் அன்பைப் போற்றி வழ்வோம்.

***அன்புடன் ஆசிரியர்***
***ஆ. சண்முகலிங்கம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டிச்சேரியில் நடந்த 09ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 09ஆவது உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாடு இத்தத் தடவை இந்தியாவில் புதுவை மண்ணில் வெகு சிறப்பாக நடந்தேறியுள்ளது. இந்தத் தமிழ் மாநாடு இயக்கத்தின் தலைமையகம் திட்டமிட்டபடி 2004ம் ஆண்டில் யூலை 10,11,12ஆம் நாட்களில் நடந்தது. பாண்டிச்சேரி மாநிலத்தில் நகரப்புறத்தில் அமைந்துள்ள ஆந்திரசபா மண்டபத்தில் மாநாட்டு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

03 நாட்கள் அமைந்த இந்த மாநாட்டில் இரு தினங்கள் சிறப்பான பயனுள்ள தமிழ் விழா நிகழ்வுகள் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைந்து விளங்கின. புதுச்சேரியில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு என்ற பெருமையை இது பெற்றுக் கொண்டது. இதனால் புதுவைத் தமிழ் மக்கள் பெருந் திரளாக வந்து மாநாட்டில் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

**முதலாம் நாள் நிகழ்வு**

முதல் நாள் மாநாட்டு தொடக்கத்தின் போது தமிழ்ப் பண்பாட்டு அடிப்படையில் குத்துவிளக்கு ஏற்றப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த விழா துவக்கத்தில் தமிழ் வாழ்த்துப் பாடல்கள் இசைக்கப்பட்டன. தமிழ் வாழ்த்து பாடல்களை பள்ளி மாணவியர்கள் பாடிச் சிறப்பித்தார்கள். இதனைத் தொடர்ந்து உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் உலகத் தமிழர் கொடியை இந்த இயக்கத்தின் அகிலத் தலைவர் திரு. சி. செல்லையா அவர்கள் ஏற்றி வைத்தார். கொடியேற்றும் போது இயக்கத்தின் உலகத்தமிழர் கீதமும் இசைக்கப்பட்டது மாநாட்டுக்குச் சிறப்பு விருந்தினர்களாக பாண்டிச்சேரி மானிலக் கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு இலட்சுமி நாராயணன் அவர்களும், இலங்கையின் முன்னாள் அமைச்சரும் தற்போதைய மலை நாட்டு பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. பெ. சந்திரசேகரன் அவர்களும் யுனஸ்கோவின் தமிழ்த்துறை அலுவலர் பேராசிரியர் திரு. மணவை முஸ்தாபா அவர்களும் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் மகன் கவிஞர் மன்னர் மன்னன் அவர்களும், இன்றைய தகவல் வானொலிப் புகழ் தென்கச்சி கோ. சுவாமிநாதன் அவர்களும் மற்றும் பல அறிஞர்களும் வருகை தந்து கலந்து சிறப்பித்தார்கள்.

உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் பலர் பேராளர்களாக மாநாட்டில் பங்கு பற்றினார்கள். தென்னாபிரிக்காவில் இருந்து அறிஞர் கிரிஸ் கிஸ்ரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் ஒரு குழுவினர் வருகை தந்திருந்தனர். இதில் தென்னாபிரிக்காவில் கல்வி மான்கள் செல்வி. பத்மா நாயுடு, செல்வி. அனுசியா முதலி, திருமதி அன்யெலா செட்டி போன்றோர் இடம் பெற்றிருந்தனர். இலங்கையிலிருந்து இலங்கையின் உ.த.ப இன் தலைவர் திரு.ஆ. சண்முகலிங்கம் அவர்களும் உ.த.ப. இயக்கப் பிரமுகர் திரு. சி.வ ஆறுமுகசாமி அவர்களும் மாநாட்டில் பங்குபற்றினார்கள். இலண்டன், கனடா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, அந்தமான், சென்னை போன்ற இடங்களில் இருந்து பேராளர் பலர் வந்திருந்தனர். கனடாவில் இருந்து திரு. எஸ். செகராசசிங்கம், திருமதி. செல்லையா, புதுவை என். ராமன் போன்றோரும் அந்தமான் தீவுகளில் இருந்து உ.த.ப. இயக்கத்தின் அந்தமான தலைவர் திரு. சு.ப. கரிகாலன் வளவன் தலைமையில் திரு. போஜராசா, திரு. தாமோதரம் ஆகிய மூவர் கொண்ட குழுவும் மாநாட்டுக்கு வருகை தந்துள்ளது. இந்தியாவில் பல இடங்களில் இருந்து பல அறிஞர்கள் வந்திருந்தனர். உ.த.ப. இயக்கத்தின் இந்தியக் கிளைத் தலைவர் திரு. ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தலைமையில் பெரியதொரு பேராளர் குழுவினர் மாநாட்டில் கலந்து சிறப்பித்தார்கள். இலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறை பேராசிரியர்களான திருமதி நாச்சியார் செல்வநாயகம் மற்றும் திருமதி. கலைவாணி இராமநாதன் இருவரும் மாநாட்டிற்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டு கலந்து கொண்டனர்.இவர்கள் மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் வாசித்து சிறப்புரை ஆற்றிப் பாராட்டுப் பெற்றனர்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் பலரும் தமிழகத்தைச்சேர்ந்த பெரியார்கள் பலரும் மாநாட்டிற்கு வருகை தந்திருந்தார்கள். புதுவை அறிஞர்களான அரிமளம் நா. பத்மநாதன் பேராசிரியர் எஸ். திருமுருகன் கவிஞர் திரு. எம். நாகப்பா வழக்கறிஞர் திரு. S. நாராயணசாமி வழக்கறிஞர் திரு. N. ஜெயபால் போன்றோர் குறிப்பிடத்த தக்கவர்களாவர். புதுவையில் இயங்கிவரும் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மாநாட்டைக் கௌரவித்துத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தது.

மாநாட்டில் திருக்குறள் தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கவிதை தமிழர் வரலாறு, தமிழ் வளர்ச்சி, தமிழ்க் கலைகள், உலகளாவிய தமிழரும் - தமிழும் போன்ற விடயங்களில் பல சிறப்புக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.

மாநாட்டில் தமிழ் மொழி பண்பாடு, மற்றும் கலை கலாச்சாரம் தொடர்பான நிகழ்வுகள் கலை நிகழ்ச்சிகளாக நடைபெற்றன. மாநாட்டு நிகழ்ச்சிகள் 09 அரங்குகளில், ( ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அரங்கு, இர. ந. வீரப்பனார் அரங்கு, பாவேந்தர் பாரதி தாசன் அரங்கு பாரதியார் அரங்கு அறிஞர் அண்ணா அரங்கு, சுப. சுப்பிரமணியன் அரங்கு) நடைபெற்றன. இந்த மாநாட்டின் கருப்பொருள் "21ஆம் நூற்றாண்டில் தமிழும் தமிழரும்" என்பதாகும். 09 அரங்குகளில் 36 தமிழ்ப் பேரறிஞர்கள் வெவ்வேறு அம்சங்களில் உரையாற்றினார்கள். அரங்குகளின் செயலாளராகத் திரு. எஸ். நாகேஸ்வரன் அவர்கள் செயலாற்றினார். தமிழ்ப் பண்பாடு, கலை கலாச்சாரச் சிறப்புகளை வெளிப்படுத்தும் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றன. தமிழரின் பாரம்பரிய கலையான தற்காப்புக் கலை (சிலம்பம்) நிகழ்ச்சியும் காண்பிக்கப்பட்டது. உ.த.ப இன் இலங்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம், தென்னாபிரிக்காத் தலைவர் திரு. கிரிஸ் கிஸ்ரன் ஆகியோர் மாநாட்டில் சிறப்புரை ஆற்றினார்கள்.

02ஆம் நாள் மாநாட்டில் அன்று மாநாட்டிற்கு வருகை தந்த உலகப் பேராளர்களான அறிஞர் பெருமக்களுக்கு புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு திரு. எஸ். ரங்கசாமி அவர்கள் இரவு விருந்தொன்று ஏற்பாடு செய்து கௌரவித்தமை சிறப்பாக குறிப்பிடத் தக்கது.

மாநாட்டுப் பேராளர்களுக்கு போக்குவரத்து வசதிகள் மற்றும் உணவு தங்குமிட வசதிகள் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. பேராளர்களுக்கு தங்குமிட வசதிகள் பாண்டிச்சேரி முருகன் விடுதியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. மாநாட்டில் மலர் வெளியீடு முதலாம் நாள் நடைபெற்றது. முதலாவது மலரைப் பாவேந்தனர் பாரதிதாசன் அவர்களின் மகன் திரு. கவிஞர் மன்னர் மன்னன் வழங்க, இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பெ. சந்திரசேகரன் அவர்கள் பெற்றுச் சிறப்பித்தார். மாநாட்டு மலர்கள் பார்வையாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

மாநாட்டில் பயனுள்ள பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த மாநாடு அகிலத் தலைவரின் தலைமையில் இந்தியக் கிளைத் தலைவர் திரு. ஏ. எஸ் கிருஸ்ணமூர்த்தி அவர்களின் உதவியுடன் பாண்டிச்சேரிக் கிளை பிரமுகவர்கள் பலரின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

(ஆ.ச.லிங்கம்)

**அட்டைப்பட விளக்கம்**

## 09 ஆவது மாநாட்டுப் படம்

பாண்டிச்சேரியில் நடந்த உ.த.ப. இயக்கத்தின் 09 ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டில் மாநாட்டு மலரை பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் மகன் கவிஞர் மன்னர் மன்னன் வழங்க, இலங்கையின் முன்னாள் அமைச்சரும் இந் நாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. பெ. சந்திரசேகரன் அவர்கள் பெறுவதைக் காணலாம்.

இடமிருந்து வலமாக:- திரு. ஆ. சண்முகலிங்கம் தமிழக அறிஞர் திரு. A.S கிருஸ்ணமூர்த்தி, கவிஞர் திரு. மன்னர் மன்னன் திரு. பெ. சந்திரசேகரன் (M.P) திருமதி. செல்லையா, திரு. சி. செல்லையா, திரு. மணவை முஸ்தபா ஆகியோர் படத்தில் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ.த.ப இயக்கத்தின் 09ஆவது உலக மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் (சில)

1. இலங்கையில் போரினால் கஷ்டப்பட்டு வரும் தமிழர்கள் மீண்டும் தமது வாழ்விடங்களில் குடியேறி வாழ ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இலங்கை அரசு செய்யவேண்டும். சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தமிழர் இனப் பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணப்பட இலங்கை அரசு ஆவன செய்யவேண்டுமென்று இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

2. தமிழ் மொழியை செம்மொழியாக்க உறுதியளித்த இந்திய மத்திய அரசாங்கத்துக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் இந்த மாநாடு தெரிவித்துக் கொள்கிறது.

3. தமிழ் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு தமிழை பயிற்று மொழிவழியாக கல்வி கற்க ஆவன செய்ய வேண்டுமென இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

4. புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகளில் அவர்களின் தமிழ் மொழி கலை, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இந்திய மத்திய மாநில அரசுகளின் ஆதரவும் உதவியும் கூடுதலாக்கப்பட வேண்டுமென்று இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

5. தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்கள் புலம் பெயர்ந்த தமிழர்கள் பயன்படும் வகையில் தமது கல்விப் பணிகளை மேலும் விரிவாக்கஞ் செய்ய வேண்டுமென்று இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

6. அந்தமான், நிக்கோபார் தீவுகளில் வாழ்ந்து வரும் தமிழர்களின் கல்வி வேலை வாய்ப்பு வசதிகள் தொடர்ந்து இருப்பதற்கு மத்திய அரசும், தமிழக மற்றும் பாண்டிச்சேரி மானில அரசுகள் ஆவன செய்து உதவிட வேண்டுமென்று இம் மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

---

INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE
(Non Profit Organisation)
PRESIDENT - MR.S. CHELLIAH

ADDRESS:- 936 MCCOWAN ROAD,
SCARBOROUGH ONT. MIP3H6
CANADA.

T.P 416 - 439 - 6418
FAX - 416 - 439 - 9768

*E - mail - imtcchelliah@yahoo.com.*
*WEB SITE - W.W.W.imtcweb.com.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த 100 ஆண்டுகளில் தமிழர் பொருளாதாரம்



தமிழ்ப்பணிச் செல்வர் திரு.
ஆ. சண்முகலிங்கம்
இலங்கை.

மனிதனின் உயிர் வாழ்வுக்குப் பெருளாதாரம் மிகவும் முக்கியமானது. பொருளாதாரம் இருந்தால்தான் மனிதன் தனது அவசியத்தேவைக்கு உணவு உறைவிடம், உடை, நல வாழ்வு விடயங்கள் போன்றவற்றை பெற்று வாழமுடியும்.

"பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை" இது வள்ளுவர் வாக்கு – ஆகையால் மனிதனானவன் தான் வாழ்வதற்குப் பொருளாதாரத்தை வளர்த்து விருத்தி செய்து அதன் மூலம் பயனடைய முடியும். இதனால் அவன் வாழும் சமுதாயமும் சிறப்பாக விளங்கும். நமது நாட்டில் தமிழ்ப் பிரதேசங்களில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் நிலவி வந்த பொருளாதார நிலையும் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று வரை அமைந்து வரும் பொருளாதார நிலைமையும் ஒரே மாதிரியானவையாக இருக்கவில்லை. இந்தப் பொருளாதார நிலையில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் இன்று வாழும் மக்கள் அறிந்து சிந்திக்க வேண்டியனவாகும்.

**நமது விவசாய பூமியும் கடல் வளமும்**

நமது மக்கள் இன்றும் சரி அன்றும் சரி கஷ்டப்பட்டு உழைப்பதற்கும் பெயர் பெற்றவர்கள். தமிழர்கள் கடின உழைப்பாளிகள் என்று பிற இனத்தவர்கள் புகழ்ந்து பேசும் நிலையும் இருந்துள்ளது.

நமது மண்ணில் நீர் வளம் நிறைந்து விளங்கி வருகிறது. நில வளமும் சீராக இருப்பதைக் காணலாம். இதனால் விவசாய வேலைகளுக்கு உகந்த வளம்மிக்க பூமியாக நமது பிரதேசம் உள்ளது. தமது பகுதியைச் சூழவுள்ள 450 மைல்கள் தொலைவுள்ள கடல் பிரதேசமும் பரந்து விரிந்து கிடக்கும் கடலும், நமக்குச் செல்வம் கொழிக்கும் கடல் வளத்தின் பயன்களைத் தந்து வருகின்றன. இவற்றால் எமது பெரு நிலத்தின் புவியியல் சூழல் விவசாய செயற்பாடுகளுக்கும் மற்றும் கடல் சார்ந்த தொழில்களுக்கும் பெரிய அளவில் உதவியாக உறுதுணையாகி இருந்து வருகின்றது.

விவசாயத்தில் இந்தப் பிரதேசம் வானம் பார்த்த பூமி என்று செல்லப்படும். மாரிகாலத்தில் பெய்யும் மழையை நம்பியே நெல் வேளான்மை விவசாய நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. மழையில்லாத காலங்களில் கிணற்று நீரைப் பயன்படுத்திக் தோட்டப் பயிர்ச் செய்கை பண்ணப்படுகின்றது. பெரிய குளங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் கிளிநொச்சி, மன்னார் பகுதிகளில் சிறுபோக விவசாயமும் செய்கை பண்ணப்படும். இது 1940 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைமுறையில் உள்ளது. ஆங்காங்கே பரந்து செறிந்து கிடக்கும் வயல் நிலங்களில் நெல் விவசாயம் செய்யப்பட்டு வருகின்றது. மேட்டு நிலங்களில் அமைந்த தோட்டங்களில் தோட்டப் பயிர் தானியங்கள் பயிரிடப்படும் தோட்டப் பயிர் வகையில் காய்கறிகளில் கீரைவகை, கத்தரிக்காய், வெண்டி, பயித்தங்காய், பூசனி வகை, பாகல், புடோல், முருங்கைக்காய் போன்றவையும், கிழங்கு வகையில் கச்சான், கரணை, வள்ளி, மரவள்ளி, வத்தாளை ஆகியவையும் பல ஆண்டுகளாக செய்கை பண்ணப்பட்டு வருவதை காணலாம். தானிய வகையில் தினை, சாமி, குரக்கன், வரகு, உழுந்து, எள்ளு, பயறு போன்றவையும் பயிரிடப்பட்டு வந்துள்ளன. இதைவிட தென்னிலங்கை மக்களின் தேவைக்காக நமது மண்ணில் சில இடங்களில் நூறாண்டுகளுக்கு மேலாக புகையிலைச் செய்கையும் செய்யப்பட்டு வருவது இன்று வரை தொடர்கிறது.

வீட்டு நிலங்களில் தோட்ட நிலங்களில் பழமரங்கள் நட்டு அவற்றால் பல வருடங்களாக நம் மக்கள் பயன்பெற்று வருகின்றனர். மா, பலா, வாழை, கொய்யா, எலுமிச்சை, பப்பாளி போன்றவை நமது பகுதிகளில் பிரசித்திபெற்றவையாகும். இதனைவிட நமது பாரம்பரிய மரங்களான தென்னை, பனை ஆகியவை பல நூற்றாண்டுகளாக வளர்க்கப்பட்டு பயன் தந்து நிற்கின்றன. பனை மரம் ஒன்று முளைத்து வளர்ந்து பயன்தர 50 ஆண்டுகள் மேல் செல்லும். தென்னை மரமோ 05 அல்லது 07 ஆண்டுகளில் வளர்ந்து நமக்கு வருமானம் தரத்துவங்கும். நமது பனந் தோப்புக்கள் யாவும் நமது முன்னோர் வளர்த்தெடுத்த செல்வங்களாகும். இப்போது காணப்படும் பனைகள் சில 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தைக் கொண்டவையாகும்.

பல பயன்களைத் தந்து வரும் நமது பனை விருட்சங்கள் கடந்த 30 ஆண்டுகளாக அழிக்கப்பட்டு வருவது வருந்தத்தக்க விடயமாகும். இந்த மண்ணில் லட்சக்கணக்கில் காணப்பட்ட பனை மரங்கள் இன்று ஆயிரக் கணக்கில் சுருங்கிவிட்டன. இந்த நிலை தொடருமாயின் இன்னும் 25 ஆண்டுகளில் சில ஆயிரம் கற்பக தருக்களே மிஞ்சும். பனை மரங்களின் அருமை தெரியாத இன்றைய சமுதாயத்தினர் அவற்றை வளர்ப்பதில் அக்கறை கொள்வதில்லை.

மேலும் நம்முடைய பூமியில் வளர்ந்து இறுமாந்து நின்ற வேப்பமரங்கள், புளியமரங்கள், இருப்பைகள் யாவும் பணத்துக்காக அழிக்கப்பட்டு விலை போகின்றன. இந்த மரங்கள் சில நூற்றாண்டுகளாக பயன்தந்து வருபவையாகும். இவை நடப்பட்டு பெரிய மரமாக வளர ஐம்பது (50) ஆண்டுகளுக்கு மேல் ஆகும். இவை அழிக்கப்படுவதால் நமது புளித்தேவையை வேம்பின் மருத்துவப் பொருள்களை வேறு பிரதேசங்களிலோ அல்லது அயல் நாட்டிலிருந்தோ இறக்குமதி செய்ய வேண்டிய நிலை தோன்றும்.

நமது கடல்களில் மீன் பிடித்தொழில் மூலம் மீன்கள் மற்றும் கடல் வாழ் உயிரினங்கள் இவற்றை உண்ணும் மக்களில் கணிசமான தொகையினர்க்கு உணவுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைக்கு உதவி வருகின்றன. இதனால் இந்த தொழில் செய்யும் மக்கள் நல்ல பொருளாதாரத்தையும் பெற்று வந்துள்ளதைக் காணமுடியும். 1960 ஆம் ஆண்டுகள் துவங்கி முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பகுதிகளில் பிடிக்கப்பட்ட மீன்கள் லொறிகள் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு வந்துள்ளன. இதனால் பலர் இந்த வியாபாரத்தால் பெரு நிதியைப் பெற்று வந்துள்ளனர். 1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் நாட்டில் தோன்றிய போர்ப் பிரச்சினைகளால் இந்த வர்த்தகம் தடைப்படலாயிற்று. நெல் வேளாண்மை, தோட்டப் பயிர்ச் செய்கை, பழந்தோட்டங்கள், பயன்தரும் மரங்கள், மற்றும் கடல்தொழில் வகையால் அமையும் பயன்கள் யாவும் நமது மக்களுக்கு தொழில் வருமானங்களை பல்லாண்டுகளாக அளித்து வந்துள்ளன. இன்றும் இவை பொருளாதாரத்துக்கு உதவியாக இருந்து வருகின்றன. இத்தகைய சீரான பொருளாதார முயற்சிகள் 1960 ஆம் ஆண்டு வரை பரவலாக நிலவி வந்துள்ளன. ஆயினும். இவற்றில் புதிய மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. 1960 களின் பின்னர் நமது வட மாநிலத்தில் திராட்சைப்பழ நடுகை அறிமுகமானது. அதைத் தொடர்ந்து மலைநாட்டு மரக்கறி வகையான லீக்ஸ், போஞ்சி, கரட், பீற்றூட், முள்ளங்கி, கோவா, உருளைக்கிழங்கு போன்றவையும் இங்கே பயிரிடப்படும் முயற்சிகளும் தொடங்கப்பட்டன. அவை இது நாள் வரை தொடர்ந்து வருகின்றன.

**1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் நமது பொருளாதாரம்**

ஆங்கிலேயர் ஆட்சியில் 1948 ஆம் ஆண்டு வரை நம்முடைய மக்கள் விவசாயத் தொழில்களையே பிரதானமாக வாழ்வுக்கு ஆதாரமாக நம்பி வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அன்றைய காலத்தில் அரசாங்கத்தால் பெரிய அளவில் நன்மையும் மக்களுக்குக் கிடைத்திருக்கவில்லை. 1942 இல் யுத்த காலத்துக்காக அறிமுகமான கூப்பன் முறையால் வறிய மக்கள் அந்நியப் பொருட்களான மா, சீனி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்களை பெற்று வந்தனர்.

**அரசாங்கத் தொழில் மூலம் வருமானம்**

நமது தேசத்தில் சுதந்திரத்துக்கு முன்னர் அரசாங்க உத்தியோகங்கள் மிகவும் குறைவாகவே இருந்துள்ளன. ஆங்கில மொழி படித்த தமிழர்கள் மத்தியில் திறமையுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து வந்தது. தமிழர்கள் நேர்மையாகவும் சட்டத்தை மதிப்பவர்களாகவும் ஒழுங்கானவர்களாகவும் இருப்பதைக் கண்டு ஆங்கிலேய அதிகாரிகள் இவர்களுக்கு ரயில்வே, அரச நிர்வாகப் பகுதிகள், நீர்ப்பாசனம், மராமத்து, துறைமுகம், மருத்துவ மனைகள் போன்றவற்றில் உத்தியோகம் வழங்கி வந்தார்கள். இதனால் அப்போது பெரும்பான்மை இனத்தவர்கள் அதிக அளவில் அரச உத்தியோகம் பெற முடியவில்லை. இப்படியாக நமது மக்கள் அரசாங்கத் தொழில் செய்தும் வருமானம் பெற்றும் வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

150 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் பள்ளிக்கூடங்கள் சில ஊர்களில் அமைக்கப்பட்டுத் தமிழ்ப் போதனை நடத்து வந்தது. இவை நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களாலும், அவரைத்தொடர்ந்து சில பெரியார்களாலும் நிறுவப்பட்டவையாகும். இவை தனியார் கல்வி அமைப்புகளாக இயங்கி வந்தன. இவற்றில் தமிழ் கற்ற பலர் தமிழ் ஆசிரியர் தொழில் செய்து வருமானம் பெற்று வந்தனர். இவற்றைவிட யாழ். நகர் வட்டுக்கோட்டை, உடுவில், வடமராட்சி, தென்மராட்சி போன்ற இடங்களில் ஆங்காங்கே சில ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வந்தன. இவை அன்று நிலவி வந்த ஆங்கிலேயர் ஆட்சியில் கிறிஸ்தவ மிசனரிமாரின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்டவையாகும். இவற்றில் பலர் சேர்ந்து ஆங்கிலக் கல்வியை பெற்று வந்தனர்.

**இலவசக் கல்வி முறை**

1944 ஆம் ஆண்டில் நமது நாட்டில் இலவசக் கல்விமுறை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் பலர் தமது பிள்ளைகளைப் படிப்பிக்கும் ஆர்வம் ஏற்படலாறிற்று. இப்படியாகக் கல்வியைக் கற்று நம்மவர் அறிவைப் பெறலாயினர். பணக்காரர், வசதிபடைத்தோர் தமது பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளில் படிக்க வைத்து பின்னர் மேற்படிப்பை கொழும்பில் ஏற்பாடு செய்து அவர்களை டாக்டர், என்சினியர், கணக்காளர், வழக்கறிஞர் போன்ற பெரிய தொழில்கள் மற்றும் பெரிய அரச உத்தியோகங்களில் சேர்த்தார்கள். ஆயினும் அந்நாளில் உத்தியோகத் தேவைகள் குறைவாகவே காணப்பட்டுவந்தன.

**வியாபாரத் தொழில் வகையால் பொருளீட்டல்**

1930 ஆம் வருடத்துக்கு முன்பிருந்தே தமிழர்கள் இலங்கை முழுவதிலும், வியாபாரத்துறையில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் தென்னிலங்கைப் பகுதிகள், கண்டிப் பகுதிகள், பலவற்றில் புகையிலைக் கடைகள் சாப்பாட்டுக் கடைகள் சில்லறை வியாபாரம், வழி வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டு வருமானம் தேடி வந்தனர். இவர்களின் வருமானங்கள் இங்கேயுள்ள குடும்பங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன.

**மலாயா - சிங்கப்பூர் சென்றவர்கள்**

தொழில் முயற்சிகள் செய்து பணம் தேடும் எண்ணமும் ஆர்வமும் கொண்டிருந்த பலர் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்குக் கடல் கப்பல்களில் சென்று அங்கே தங்கி விவசாயம் தோட்ட வேலை, ரப்பர் தோட்ட வேலை, ரயில்வே கூலி வேலைகள் போன்றவற்றில் தொழில் புரிந்து வந்தனர். படித்தவர்கள் சிலர் அங்கே அரசாங்க தொழில்களில் இணைந்து உழைப்பால் வருமானம் பெற்று வந்தார்கள். இவர்களின் உழைப்பு வருமானங்களில் கணிசமான தொகை அவர்களின் உறவுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தன. பலர் அந்த நாடுகளில் நிரந்தரமாகத் தங்கி வாழந்து வருவதைக் காணலாம். அந்த நாடுகளில் வாழந்த பலர் பின்னாளில் நமது தாயகம் திரும்பி வந்து மலாயன் பென்சனியர்களாக வாழ்ந்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950 ஆண்டுக்குப் பின்னர் அரசாங்கத்தில் எழுதுவினைஞர் மற்றும் உத்தியோகங்களைப் பெற்று நம்மவர் பலர் கொழும்பு, மலையகம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் பணியாற்றி வந்திருக்கிறார்கள். இவர்கள் தமது பொருளாதாரத்தை மணி ஓடர் (காசுக் கட்டளை) மூலமாக தமது குடும்பங்களுக்கு அனுப்பி உதவி வந்துள்ளனர். இது அன்று மணிஓடர் பொருளாதாரம் என்று வர்ணிக்கப்பட்டது 1952 ஆம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாணப்பாணத்தில் சீமேந்து தொழிற்சாலையும் கிளிநொச்சியில் இரசாயனத் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டன. இவற்றில் சில ஆயிரம் பேர் வேலைகள் பெற்று வருமானம் பெற்றுவந்தனர்.

**1956 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் - S.W.R.D பண்டார நாயக்கா யுகம்**

நமது தேசத்தில் 1948ம் ஆண்டில் கிடைத்த விடுதலைக்குப் பின்னர் நாட்டில் சுதேச உணர்வு மேலோங்கி தேசிய வாதம் தலைதூக்கி வளர ஆரம்பித்தது. அன்று பெற்ற நாட்டுச் சுதந்திரம் தென்னிலங்கைச் சிங்களத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டது. இதனால் நாட்டின் ஆட்சி அதிகாரங்கள் யாவும் அவர்களின் பொறுப்பில் இருந்ததால் சிங்களத் தேசிய இனவாதம் கொண்டவர்களாக தமது மக்களுக்கு நன்மை செய்யும் நோக்கில் செயல்பாடுகள் இருந்து வந்தன. 1956இல் நடந்த தேர்தல் மூலம் வெற்றி பெற்ற திரு. S.W.R.D பண்டார நாயக்கா அவர்கள் பிரதமரானார். அவரின் அரசு "சிங்களம் மட்டும்" நாட்டின் நிர்வாக மொழி என்ற சட்டத்தை ஆக்கி நடைமுறைப்படுத்தியது. இதன் காரணமாக சிங்கள மொழி இனவாதம், பௌத்த சமய வாதம் வளரத் துவங்கியது. இதன் காரணமாக அன்று அரசாங்க உத்தியோகம் பார்த்த தமிழர்கள் பலர் உத்தியோகங்களைக் கைவிடலாயினர். அப்போது படிப்படியாக அரச தொழில் வாய்ப்புத் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டு அருகி வந்தது. இது நம்மக்களின் பொருளாதார விடயங்களை வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது. ஆயினும் வடக்கு, கிழக்க மாகாணங்களில் தமிழ் மொழிக்கு நியாயமான அந்தஸ்து வழங்கப்பட்டிருந்ததால் இங்கே அரச தொழில் செய்யக்கூடிய நிலை இருந்தது. மேலும் இன, மத வாதங்கள் வளர்ந்து வந்த காரணங்களால் சிங்களப் பகுதிகளில் 1956, 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கெதிரான இனக் கலவரங்கள் நடாத்தப்பட்டன. இவற்றில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் பலியானதுடன் இவர்களின் கோடிக்கணக்கில் பெறுமதியுள்ள சொத்துடமைகள் நாசமாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. இதன்போது ஆயிரக்கணக்கானோர் அகதியாக்கப்பட்ட நிலையில் இவர்கள் இந்தியாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் தப்பி ஓடித் தஞ்சமடைந்தாாகள்.

1956ம் ஆண்டின் பின்னர் கல்விக் கொள்கையில் மாற்றம் நடந்தது. பல கல்லூரிகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. இதன் காரணமாக சிற்றூர் பேரூர் நகரப் புறங்களில் அமைந்த கல்விச் சாலைகளில் மாணவர்களுக்கான கல்வி கற்றல் வாய்ப்புகளும், வசதிகளும் உண்டாயின. பலர் உயர்கல்வியைப் பெறலாயினர். தொடர்ந்து 1974இல் சில மாகாணங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. 1974இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் பின்னர் மட்டக்களப்பில் ஒரு பல்கலைக்கழகமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டன. இதன் பயனாக பலமாணவர்கள் உள்ளூர்களில் பட்டம் பெறும் வசதிகள் தோன்றின. பட்டம் பெற்றவர்கள் பலருக்கு ஆசிரியத் தொழில்கள் நிர்வாக உத்தியோகங்கள் கிடைத்து வந்தன . க.பொ.த ( சாதாரண தரம்) உயர்தரம் படித்தவர்களுக்கும் எழுதுவினைஞர், தாதி வேலை கிராம உத்தியோகத்தர் தொழில் கிடைத்து வந்தன. கல்வித் துறை விரிவாக்கத்தால் ஆசிரியத் தொழில் துறையில் நம்மவர்க்கு ஆயிரக் கணக்கில் உத்தியோகம் கிடைத்து வந்தன அயினும் நாட்டில் இனப் பிரச்சினைகள் வளர்ந்து சிக்கல்களாகி வந்தால் நாட்டில் போர்கள், அழிவுகள் ஏற்பட ஆரம்பித்தன. இந்த நிலையால் தமிழர்களுக்கான அரச தொழில் வாய்ப்புக்கள் குறைக்கப் பட்டு வந்தன. 1983ஆம் வருடத்துக்குப் பின்னர். அரசாங்கத் தொழில் வாய்ப்புக்கள் அருகி வந்ததால் அரச தொழில் வருமானங்கள் நமது பிரசேத மக்களுக்கு படிப்படியாக தடையாகி வரலாயின.

**1970 இல் உண்டான விவசாயத் தொழில் வளர்ச்சி**

1970 ஆம் ஆண்டில் புதிய அரசியல் மாற்றம் ஏற்பட்ட போது அப்போதைய அரசாங்கம் விவசாயத் தொழில்களுக்கு ஊக்கம் அளித்து வந்தது. அன்று மிளகாய், வெங்காயம், அரிசி போன்ற பொருட்களின் இறக்குமதியை அரசு நிறுத்தியது. இதனால் படித்த இளைஞர் பலர் வரண்ட பிரதேசங்களில் விவசாயம் மற்றும், வெங்காயம், மிளகாய் செய்கையில் ஈடுபட்டார்கள். அவர்கள் 02 ஆண்டுகள் நல்ல வருமானம் பெற்றனர். ஆயினும் நாட்டில் மழை வீழ்ச்சி இன்றி 1973இல் வரட்சி தோன்றியதன் காரணமாக விவசாயத் தொழில்கள் தொடர முடியாமல் கைவிடலாயினர். நமது பிரதேசத்திலும் படித்த இளைஞர் பலர் யாழ். குடாநாட்டிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வன்னி போன்ற இடங்களிலும் நெல், மிளகாய், வெங்காயம் ஆகியவற்றைச் செய்கை பண்ணி நல்ல லாபமும் நன்மைகளும் பெற்று வந்தனர் அன்று ஏற்பட்ட விவசாயம் புரட்சி பின்னால் தோன்றிய வரட்சியால் நீடிக்கவில்லை. ஆயினும் மிளகாய் வெங்காயச் செய்கைகள் தற்போது யாழ். குடாநாட்டில் தொடர்ந்து செய்கை பண்ணப்பட்டு வருகின்றன. இவை கொழும்புக்கு அனுப்பப்பட்டு விற்பனையாவதால் வருமானம் கிடைத்து வருகின்றன.

## இன மொழி வாதங்கள் பொருளாதாரத்தை சீரழித்தமை

1956, 1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் தென்னிலங்கைப் பகுதியில் நடந்த தமிழர்களுக்கெதிரான இனக்கலவரங்களால் ஏற்பட்ட பாரிய அழிவுகளைத் தொடர்ந்து அரசியல் போராட்டங்கள் தொடங்கி வந்தன அவை வன்முறை ஆயுதப் போராட்டங்களாக பரிணாமம் பெற்றன இந்தப் போராட்டங்கள் 1974 இல் வடக்கில் ஆரம்பமாகிப் படிப்படியாக வளர்ந்து வந்தன. இதன் காரணமாக 1985 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் உள்நாட்டு யுத்தங்கள் தோன்றி 2001 ஆம் ஆண்டு வரை விட்டும் தொட்டும் நடந்து வரலாயின போர்ப் பிரச்சினைகளால் மக்கள் வாழ்ந்து வந்த வளமான வாழ்விடங்கள் மற்றும் விவசாய நிலங்களை இழந்தனர். கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் - மீன்பிடித் தொழில்களுக்கு தடைகள் அமைந்தன. இதனால் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் பொருளாதாரத்தை இழந்து இன்னல் பட்டனர். தற்போது சில தடைகள் அகன்று சிறிது முன்னேற்றம் தோன்றியுள்ளது.

## 1983ம் இன் பின் ஏற்பட்ட அகதி நிலை

நாட்டில் அரசுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் நடந்து வந்த போர் பிரச்சினைகளால் பலர் அகதியாகி நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்று ஆங்காங்கே தஞ்சமடைந்தனர் இந்தியாவில் அகதியானோர் 02 லட்சம் தொகையினராவர். அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகளில் அகதியானோர்.04 லட்சங்களுக் மேலாகும் இந்த நாட்டில் அகதியாக்கப்பட்ட 03 லட்சத்துக்கு 60 ஆயிரம் பேர் அகதி முகாம்களில் வாழ்கின்றார்கள். அவர்களின் வாழ்வுக்கு தொண்டர் நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம் அளிக்கும் உணவு நிவாரணங்களையே நம்பி வாழ்கிறார்கள். வெளிநாடுகளில் வாழும் மக்கள் தங்களின் உழைப்பு வருமானத்தில் இங்கே வாழும் தமது உறவுகளுக்கும் அனுப்பி வருகிறார்கள். இதுவே புலம் பெயர்ந்தோர் வகையால் கிடைக்கும் பொருளாதாரமாகும்.

## பொருளாதாரம் விருத்தி பெற மாற்றங்கள் தேவை

நமது மக்கள் கடந்த 100 ஆண்டுகளில் எப்படியாக என்ன வழிகளில் பொருளாதாரத்தை தேடி வாழ்ந்த சில வரலாற்றுச் செய்திகளை அறிந்தோம் பெரும்பாலான மக்கள் சுய தொழில்கள் கமத் தொழில்கள் போன்ற தொழில்களைச் செய்தே வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

அதே தொழில் முயற்சிகள் இன்றும் நடந்து வருகின்றன. 30 வீதமான மக்களுக்கு புலம் பெயர்ந்து வெளி நாடுகளில் வாழும் உறவுகள் அனுப்பும் உதவிகள் இருந்து வருகின்றன. 10 வீதமான தொகையினர் அரசாங்க, அரசு சார்ந்த தொழில்கள் புரிந்து வருமானங்கள் பெறுகின்றனர். புதிய வேலைகளுக்கான சந்தர்ப்பங்கள் அருகி வருவதை அவதானிக்கலாம் இன்ன பல காரணங்களால் நமது மக்கள் பொருளாதாரத்தில் உயர முடியாத நிலையில் உள்ளதால் நாம் நமது பொருளாதாரத்தை வளர்த்து முன்னேற்றம் அடைய என்ன செய்ய வேண்டும்?

## பொருளாதாரச் சீரழிவுக்கான இன்று நிலவும் காரணிகள்

இன்றைய காலத்தில் நமக்குக் கிடைத்து வரும் வருமானங்கள், பொருளாதாரங்கள் பல விடயங்களால் பாழாக்கப்பட்டு வருகின்றன. அந்நிய ஆடம்பரப் பொருட்கள் பல நமது பிரதேசத்தில் எடுத்து வரப்பட்டு குவிந்த வண்ணம் உள்ளன. அவசியத்துக்கு மேலாக இவற்றை விலைக்கு வாங்கி பயன் படுத்தி வருவதால் பெரும் பொருள் வீண் விரயமாகி வருகின்றது. இந்தப் பணம் நமது பிரதேசத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு திரும்பிப் போவதைக் காணலாம் வாகனங்கள் மோட்டார் சைக்கிள் வண்டிகள் தொலைக்காட்சிப் பெட்டிகள் குளிர்சாதனங்கள், கணணிகள், மின்சாரப் பொருட்கள் போன்றவற்றால் நமது பொருளாதாரம் வீணாகி வருகின்றது. நம் மண்ணில் மது பாவனை, மது விற்பனை அதிகமாகிவிட்டது. இதனால் கணிசமான மனித சீரழிவும் உயிர் இழப்புகளும் கூடிவருகின்றன. கொண்டாட்டங்களில் வெடிகள் கொழுத்துவதால் லட்சக்கணக்கில் நமது நாட்டுப் பணம் அழிந்து வருவதுடன் சமுதாயத்தின் அமைதியான வாழ்வையும் குலைத்து வருகின்றது.

உடல் வலுவுள்ள இளம் சமுதாயத்தினர் பலர் உழைத்து வருமானம் பெறுவதில் அக்கறையில்லாமல் இருப்பதைக் காணலாம். இவர்கள் பலர் கிடைக்கும் பண உதவிகளை ஆடம்பர வாகனங்களை விலைக்கி வாங்கி அவற்றில் கட்டுப்பாடின்றி அலைந்து வாழ்வை வீணடிப்பதுடன் சமூகத்துக்கும் கேடாகவும் வாழ்கிறார்கள். நமது பிரதேசத்தில் வளமான நிலங்கள் செய்கை பண்ணப் படாமல் வீணே கிடக்கின்றன. இவற்றில் விவசாயம், தோட்டப் பயிர்வகை செய்து பயனடையலாம். உப்பு நிலங்கள், தரிசு நிலங்கள் வெட்டை வெளியாகக் கிடந்து வருகின்றன. இவற்றைப் பயன்படுத்தி தென்னை மரங்கள் நடுகை செய்யலாம். தேக்கு, சவுக்கு, பூவரசு விக்ஸ் இப்பில் போன்றவற்றறை நடுகை பண்ணி விறகுத் தேவைக்கு எடுத்துப் பொருளாதாரத்தை பெறலாம்.

## பொருளாதாரம் வாழ்வுக்கு மூலதாரம் - எப்படி முன்னேற்றலாம்

இன்று நமது வடமாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும், பொருளாதாரத்தை மிகுதியாகத் தரக்கூடிய வளங்கள் பல இருக்கின்றன. இன்று எமது பகுதிகளில் ஆளணி இல்லாமல் - போதாமல் பல வேலைகள் - பணிகள் தாமதமாகி வருகின்றன. விவசாயம், கூலி வேலைகள், கட்டுமானப் பணிகள், மரவேலைகள், போன்றவற்றில் ஈடுபடுவதற்கு ஆட்கள் பற்றாக்குறை உள்ளது. பல இளைஞர்கள் வேலை எதுவும் செய்ய விரும்பாமல் சோம்பித திரிவதைக் காணலாம்.

பெண்கள் ஆண்களைவிட அதிக தொகையில் வாழ்கின்றர். சீனா, யப்பான், கொரியா, ரஷ்யா இந்தியா போன்ற நாடுகளில் பெண்கள் சிறந்த உழைப்பாளிகளாககத் திகழ்கிறார்கள். நமது பிரதேசத்தில் வாழும் பெண்கள் விவசாயத் தொழில்களில் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து உழைத்துப் பொருளாதாரத்தைத் தேடலாம். இதைவிட தொழில் நுட்பம் சார்ந்த தொழில்களிலும் பணி செய்யலாம்.

இவற்றை தனித்துவமாகவும் கூட்டாகவும் இணைந்து செய்யலாம். வாகனத்தொழில்களை பழகி ஆர்வமுள்ளவர்கள் வருமானமும் பெறலாம். இவற்றுக்கு நல்ல சிந்தனை ஊக்கம் ஆர்வம் தேவை.

நமது வளங் கொழிக்கும் மேட்டு நிலங்கள் தோட்டப் பூமிகளில் பழச் செய்கையை செய்யலாம். பொருத்தமான நிலங்களில் காடு வளர்த்து 05 ஆண்டுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகுத் தேவைக்கு உதவி வருமானம் அடையலாம் தென்னை மரங்கள் நட்டு 05 அல்லது 06 ஆண்டுகளில் சிறப்பான வருமான லாபங்கள் ஈட்டலாம். இன்று விறகுப் பற்றாக்குறையால் - நமது அடுப்படிகளில் வெளிநாட்டு காஸ் சிலிண்டர்கள் நுழைய ஆரம்பித்துவிட்டன. இதனால் - நமது பொருளாதாரம் - அந்நிய வியாபாரிகளுக்கு லாபம் அளிக்கப் போகின்றது. தொழில் முயற்சிகள் செய்வதற்குப் பலருக்கு பொருளதார முதலீட்டுப் பிரச்சினை இருக்கலாம். ஆயினும் முதலீடுகளைப் பெரிதாகச் செய்யாமல் படிப்படியாகச் செய்து வந்தால் தாக்கம் இருக்காது. நாம் சோர்வடையாமல் முயற்சிகளில் இறங்கி நடந்தால் நமது பொருளாதாரம் விரிவாக்கம் பெறும் என்பது உண்மை.

ஆன காரணங்களால் நமது தமிழ்ப் பிரதேசத்தில் எத்தகைய சூழ்நிலையிலும் பொருளாதாரத்தை விருத்தி பண்ணி – மக்கள் நன்மை அடைய முடியும். பிரதானமாக நாம் நம்முடைய வளங்கள் அமைந்து விளங்கும் நமது சொந்த பூமியில் நமது பாரம்பரிய தொழில்களான விவசாயம், மற்றும் தோட்டப் பயிர்ச்செய்கை மற்றும், கடல் சார்தொழில்கள், உள்ளூரில் நடந்துவரும் சுயதொழில்கள் யாவற்றையும் இன்று வாழ்ந்து மக்கள் ஈடுபட்டுச் செயல்ப்பட வேண்டியது நமது பொருளாதாரத்துக்கு பேருதவியாக இருக்கும். அவசியமற்ற அன்னிய ஆடம்பரப் பொருள் மோகம் கைவிடப்படுவதாலும் நமது பொருாதாரம் வீணாகாமல் பாதுகாக்க முடியும். இவற்றை நமது மக்கள் உணர்ந்து சிந்தித்து செயல்படுவதால் நமது தாய் நாட்டில் பொருளாதார சக்தி படைத்தவர்களாக நாம் விளங்க முடியும். நமக்கிருக்கும் வளத்தை வைத்து முயற்சியில் இறங்கி செயல் புரிந்து பொருளாதாரத்தை வளர்த்தும் சாதனை படைக்க நாம் இன்றே தயாராக வேண்டும். ஆகையால் முயற்சியால் சாதனை செய்ய செயல்பட வேண்டிய நேரத்தை காலத்தை பயனாக்கி பொருள் வளம் சேர்ப்போம். சிந்தியுங்கள் செயல்படுங்கள். செயல்படுங்கள் என்று உங்களை அழைக்கின்றோம்.


**GENERAL SECRETARY - I.M.T.C**

**பொதுச் செயலாளர் உ.த.ப இயக்கம்**

A. SHANMUGALINGAM
Paramanathan House
Manipay Road, Thavady,
Kokkuvil, n0Sri Lanka,
TP/ FAX - 0094 - 21 - 222 - 3294.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்.

அறிஞர் சின்னத்தம்பி - பத்மராசா (J.P)
B.A (Cey).P.G.D. in. Edu. M. Philo.



"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றான் பாரதி. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய மூத்த தமிழ் என புகழும் தமிழ் மொழி. உலக மொழிகளுள் பழமையானது. மனித வரலாற்றுடன் தொடர்புடையதாக விளங்கும் மொழியானது மனித இனம் தோன்றிய காலம் தொட்டே பயின்று வரப்படுகின்றது. மனிதர்களிடையே தொடர்பையும் உறவையும் ஏற்படுத்தும் சாதனமாக மொழி விளங்குகின்றது ஆரம்பத்தில் பேச்சு மொழியாக இருந்த நம் தாய் மொழி பின்பு வரி வடிவத்தைப் பெற்று வளர்ச்சி கண்டது. எழுத்தையும் ஒலியையும் கொண்டு மனிதனால் வளர்க்கப்பட்டதே மொழியாகும். இம் மொழியானது மனித வாழ்வோடு இணைந்துள்ளது எனவே தான் இம் மொழி மூலம் தமது கலாச்சாரம் பண்பாடு என்பன வளர்வதால் அம் மொழியின் சிறப்பை அறிந்திருப்பது எமது கடமையாகும். சமூக இயக்கத்துக்கும் அறிவு விருத்திக்கும் பண்பாட்டு பயிற்சிக்கும் அடிப்படையாக அமைகிறது.

இன்று உலகின் தொன்மையான மொழிகள் என்று பேசப்படும் மொழிகளில் ஒன்றாக நம் தாய் மொழி விளங்கி வருவது எமக்கு பெருமை தரும். அத்துடன் பல்வேறு அறிஞர், கவிஞர், புலவர் என பல்துறைசார் மேதைகளையும் தந்த சிறப்பு எமது மொழிக்குரியது. இவர்கள் கருத்தூடாக நோக்கும் போது விழுமியத்தை வளர்க்கவும் அறிவை விருத்தி செய்யவும் உடல் உள சமூக மயத்திற்கு உதவும் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தை தருவதற்கும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி ஆளுமைகளை வளர்க்கவும் தாயின் அரவணைப்பில் நாம் கற்றுக் கொண்ட தாய் மொழி உதவுகிறது. ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் தாய் மொழியானது தொடர்புடையது என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். தாய் மொழி இன்றிய செயற்பாடு யாவும் அன்னிய மொழிகளாகும். எமது இன்ப துன்ப உணர்வை வெளிப்படுத்த உதவுவது எமது தாய்மொழியே ஆகும். எனவே தான் மொழியியலாளரும் தாய் மொழியற்ற கல்வி உள்ளத்தை ஊனமாக்கும் என குறிப்பிட்டுள்ளனர். இதனாலே தான் நோபல் பரிசு பெற்ற இரவீந்திரநாத் தாகூர் என்ற அறிஞரும் ஒரு குழந்தைக்குத் தாய்ப்பால் எவ்வளவு முக்கியமானதோ அதேயளவு தாய் மொழியும் அவசியம் என்றார்.

மனித உரிமைப் பிரகடனத்திலும் ஐ.நா சபையானது ஒவ்வொரு குழந்தையினதும் பிறப்புரிமை கல்வி என்றும். அதுவும் தாய் மொழி மூலமே போதிக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் இன்று அன்னிய மொழி மோகம் எம்மை ஆட்கொள்கின்றது. ஆனால் எத்தனையோ அன்னியர்கள் எமது தமிழ்த் தாய் மொழியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பை அறிந்து அதனைக் கற்று எம் மொழியை வளர்த்துள்ளதை நாம் நோக்காமலில்லை. Dr.போப், தெறொபிலி, கால்டுவேல், பர்தலோமியோ, ரேணியர், வீரமாமுனிவர் போன்ற பலரும் தாய்த் தமிழை தலை வணங்கி வளர்த்தார்கள் G.U போப் என்பவர் திருவாசகத்தையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார் Dr. வின்ஸ்லோ என்பவர் தமிழ் ஆங்கில அகராதியை எழுதியுள்ளார். கால்டுவெல் என்பவரோ தொல்காப்பியம் முதல் திருக்குறள் வரை பிற மொழியுடன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். தமிழர் தம் வரலாற்றையும் தமிழ் மொழி பல மொழிகளில் கலந்துள்ளமையும் கண்டறிந்தார். வீரமாமுனிவரோ தேம்பாவணி திருவரூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, சதுரகராதி என பல நூல்களையும் படைத்துள்ளார்.

திருக்குறளில் பைபிளை கண்டேன் என கிறீஸ்தவ பாதிரியார் ஒருவர் குறிப்பிட்டிருப்பதும் மூன்றும் உலகப் போரை நீக்க வல்லது. குறளே என ஜேர்மன் அறிஞர் ஒருவர் கூறியிருப்பதும் நம் தாய் மொழிக்கு சூட்டப் பட்ட ஆரங்களே. எனவே உலகில் எங்கெங்கும் வாழினும் எமது தாய் மொழியாம் செந்தமிழ் மொழியை பேணிப் பாதுகாத்து "தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்பதற்கமைய வாழ்வதும் நம் தலையாய கடமையே ஆகும்.

திருமூலரும் இறைவன் என்னை நன்றாக படைத்தனன் தன்னை நன்றாகத் தமி செய்யுமாறே" என்றார். நற்றமிழ் வல்ல நாவுக்கரசரும் "சலம்பூவொடு தூப மறந்தறியேன் தமிழோடு இசைபாட மறந்தறியேன்.." என்கிறார். ஔவையாரும் பாலும் தெளி தேனும்...." எனப்பாடி "சங்கத்தமிழ் மூன்றும் தா" என வேண்டுகிறார். இன்று உலகிலே 2000 மேற்பட்ட மொழிகள் உள்ளன. அவற்றிலே எழுத்து வடிவம் கொண்டவை 700 மட்டுமே அவற்றிலும் இலக்கண இலக்கிய வடிவம் கொண்டவை 200 மட்டுமே அத்தகைய உயரிய மொழிகளில் இலத்தீன், கிரேக்கம் வடமொழி போன்றவை எழுத்து மொழி வளர்ச்சியடைந்த பின்னர் பேச்சு வழக்கை இழந்துவிட்டன உலகிலுள்ள தொன்மையான ஏழு மொழிகளில் ஒன்று நம் தமிழ் மொழியாகும். இன்று வரை பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் எம் மொழி வளர்ச்சியுற்று இறும்பூதெய்துகிறது எம் தமிழ் மொழி. ஒரு மொழிக்கு சிறப்பையோ அழகையோ கொடுப்பது இலக்கணமேயாகும். உயிருள்ள எந்த மொழிக்கும் இலக்கணம் அவசியம் மொழி சிதைந்து அழகு இன்றி சீரின்றி போகாது காக்கின்றது இலக்கணமே ஆகும். அத்தகைய இலக்கணத்தை கொண்ட எம் தாய் மொழி 2000ம் ஆண்டு பழமை மிக்க சங்க இலக்கியங்களையும் தன்னகத்தே கொண்ட பெருமையை உடையது. இத்தகைய தமிழின் சிறப்பை பாவேந்தர் பாரதி தாசன் கூறும் போது

"செந் நெல் மாற்றிய சோறும் - பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்
தன்னிகர் தானியம் முதிரை - கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்
நன்மதுரம் செய்கிழங்கு - காணில்
நாவில் இனித்திடும் அப்பம்
உன்னை வளர்ப்பன தமிழர் - உயிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வை வளர்ப்பது தமிழே"
என குறிப்பிடுகின்றார். அத்துடன் பிறிதோரிடத்தில் அவர்
வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோளெங்கள் வெற்றித் தோள்கள்
கங்கையைப் போல் காவிரி போல் கருத்துக்கள்
ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்
வெங் குருதி தனிற் கமழ்ந்து வீரம் செய்கின்ற
தமிழ் எங்கள் மூச்சாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதே பாரதிதாசன்
"திங்களொடும் செழும்பரிதி தன்னொடும்
விண்ணோடும் உடுக்களோடும்
பொங்கும் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்
பிறந்தோம் நாங்கள்" என்கிறார். அத்தகைய தமிழை வளர்ப்பது நம் கடமையேயல்லவா பழமைக்கு பழமையாய் புதுமைக்கு புதுமையாய் விளங்கும் ஒரே மொழி தமிழ் என்றால் அது மிகையில்லை இதன் சிறப்பை மனோன்மனியமும்
"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துக் காக்கினுமோர்
எல்லையறு பரம் பொருள் முன்னிருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
ஆரியம் போல் உலக வழக்கழிற்தொழிந்து சிதையாதன்
சீரிளமைத் திறன் வியந்து செயன் மறந்து வாழ்த்துமே என்று கூறுகிறது

சங்க காலத்தில் முடியுடை மூவேந்தராகிய சேரசோழ பாண்டியரால் முதல்,இடை, கடைச்சங்கம் அமைத்து வளர்த்த சிறப்புடைய நம் தமிழ் மொழி அகததியர், தொல்காப்பியர், கபிலர், பரணர், நக்கீரர் முதலான புலவர்களின் கைகளிலும் நாவிலும் தவழ்ந்தது எட்டுத் தொகை பத்துப்பாட்டு நூல்களாலும், பதினெண் மேல்க், கீழ்க் கணக்கு நூல்களாலும் சிறப்பு பெற்றது. எம் தமிழ் மொழியே. யாமறிந்த கவிகளிலே கம்பனைப்போல் வள்ளுவனைப்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை என்கிறார். மகாகவி பாரதி. உலகப் பொது மறையாம் திருக்குறளையும் சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, மணிமேகலை முதலான ஐம்பெருங் காப்பியங்களுள் நாககுமார காவியம், உதயகுமாரகாவியம், யசோதாகாவியம், நீலகேசி, சூளாமணி முதலான ஐஞ் சிறுகாப்பியங்களையும் கொண்டது நம் தாய்த் தமிழ் மொழியே.

இத்தனையும் போதாதென்று பன்னிரு திருமுறையும் தந்து பக்தி மொழியாகவும் விளங்குகிறது நம் தமிழ் மொழி. சீர் திருத்த வாதிகளையும் ஆன்மீக வாதிகளையும் அறிஞர் பெருமக்களையும் அணைத்து வளர்த்தது நம் திழ் மொழியே எனவே.
"ஊமையராய்ச் செவிடர்களாய் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனின் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்
என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க நாம் தமிழராய் வாழ்ந்து தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியில் பூசைகள் வேண்டும்

தமிழ்ச் செம்மல் செ. பரமநாதன்
தாவடி, இலங்கை.



தமிழ் மொழியின் சொற்கள் பொருள் நிலையில் மிகவும் ஆழமானவை. தனித்தும் தொடர்ந்தும் நின்று அவை பொருள் தரும். சொற்றொடர் நிலையில் பல விடயங்களை உள்ளடக்கி நிற்கும். காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும், கூத்தப் பிரானை வார்த்தைகளால் பேசி உலகெலாம் உணர்ந்து ஏத்தும், நின்று நிலவும் திருநெறிய தமிழ்மாலை கொண்டு அன்று போற்றியதால் இன்றும் என்றும் வாழும் பெருமை தமிழுக்குக் கிடைத்திருக்கின்றது. கலைகளினூடாக இலக்கியங்களினுடைய, மொழியினுடைய சமுதாயத்தினுடைய வரலாறு ஆராயப்படுவது இன்று நன்கு பெருகிவிட்டது.

கருங்கல்லில் விக்கிரகங்களை அமைத்து வழிபடுதலில் எம்முன்னோர் அதிக நம்பிக்கை உடையவராய் இருந்தார்கள், பண்டைய காலத்துத் தமிழ் மன்னர்கள். இவர்கள் சிற்பக் கலைக்குக் கொடுத்த ஊக்கமும், ஆர்வமும், பெருமையும் ஆயிரமாண்டுகளுக்குப் பின்பும் எம்மினத்திற்கு பெருமையும், புகழும் மட்டுமின்றி ஆன்மீக நெறியில் பற்றினையும் ஏற்படுத்துவதாகத் திகழ்கின்றது.

மற்றைய உலோகப் பொருட்களை விட கல்லின் ஆற்றல் பல மடங்கு அதிகமானது. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களின் தன்மையும் சிறப்பாக அமைந்திருக்கின்றது. கல்லானது, எதையும் தன்பால் இழுக்கக் கூடிய ஈர்ப்புச் சக்தி அதிகம் கொண்டது. ஆகாயத்தில் உள்ள மழை மேகத்தை தன்பால் ஈர்த்து மழையைப் பெய்யச் செய்வது கல்லின் ஈர்ப்புச் சக்தியாகும்.

விக்கிரக வடிவில் தெய்வ சக்தியை மக்கள் முன்னிலையில் நிறுத்தி தமிழில் பூசைகளைச் செய்து பயனடைந்தனர் எமது முன்னோரான தமிழர்கள். தமிழகத்தை ஆரியமன்னர்கள் ஆண்ட காலத்திற் கூட சமஸ்கிருதத்தில் பூசைகள் நடைபெற்றதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. இலங்கையைப் பொறுத்தவரை 150 ஆண்டுகளுக்கு முன் தமிழில் தான் பூசைகள் நடைபெற்றன. அதன் பின் தென்னிந்தியாவில் இருந்து மலையாள நம்பூதிரிகள் வழிப் பிராமணர்கள் வருகை தந்துள்ளனர். இவர்களே இலங்கையில் வடமொழிப் பூசை முறையை நமது கோவில்களில் புகுத்தினர் என்பது வரலாறு. இது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே நிகழ்ந்தது.

தமிழ் நாட்டில் பெரியார், அண்ணா போன்றவர்களின் காலத்தில் தமிழ் மொழியில் பூசைகள் நடைபெற வேண்டும் என வலியுறுத்திய போதும் நடை முறையில் பூசைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியில் நடைபெறவில்லை. கலைஞர் மு. கருணாநிதியின் ஆட்சியின் பிற்காலத்தில் தமிழ் மொழியில் பூசைகள் நடைபெற வேண்டும் என சட்டங்கள் இயற்றப்பட்டபோதும் பிராமணர் தமிழ் மொழியில் பூசைகள் செய்ய மறுத்து விட்டனர். இந்து சமய, அறநிலைப் பாதுகாப்பு அமைச்சராக விருந்த திரு. தமிழ்க் குடிமகன் அவர்களின் கட்டாயத்தின் பேரில் தமிழ் மொழியில் பூசைகள் நடைபெறலாயின. ஆண்டவனுக்கு சமஸ்கிருதம் மாத்திரமே தெரியும் தமிழ், மற்றும் பிற மொழிகள் தெரியாதென வாதிட்டனர் அங்குள்ள பிராமணர்கள். எமது நாட்டைப் பொறுத்தவரையில் பேரினவாதம் தமிழ் மொழியை ஒளித்து கட்டும் நடவடிக்கையில், சிங்களம் மட்டும் சட்டத்தினை 1956இல் பாராளுமன்றில் கொண்டு வந்து நிறைவேற்றியது. அன்றிலிருந்து இன்று வரை பேரிழப்புக்களை எமது இனம் சந்தித்து வருகிறது. இதனால் ஏற்பட்ட விழிப்புணர்வு எமது தாய் மொழியைக் கையாளும் புத்துணர்வுடன் வேகம் பெற்று வருகின்றது. மொழி அபிமானிகள் புதிய புதிய தூய தமிழ்ச் சொற்களை உருவாக்கி வருகின்றனர். எமது வழிபாட்டுக்குரிய மொழியாகத் தமிழ் மொழியைப் பிரயோகிக்கப் பின் நிற்கலாகாது.

"தோடுடைய செவியன்" என்று தான் திருவாய் மலர்ந்து இறைவனுக்குத் தேவாரம் பாடியுள்ள ஞானசம்பந்தர் மற்றும் சுந்தரர், மாணிக்கவாகசர், திருநாவுக்கரசர் போன்றவர்கள் பக்திப் பரவசத்தால் புறச் சமயங்களின் ஆதிக்கத்தைத் தகர்த்தும் அகச் சமயங்களை நிலை நிறுத்தப் பாடுபட்டது தமிழ் மொழியால் அன்றோ!

மதமாற்றங்கள் இன்று நடைபெறுவதற்கு எமது சைவ ஆலயங்களில் மக்களுக்குப் புரியாத மொழியில் பூசைகள், கிரியைகள் நடைபெறுவதே முக்கிய காரணம் என்பது எமது மக்களுக்கு புரியவில்லை. இன்று எமது மக்களிடையே சமய நம்பிக்கை குறைந்து வருகின்றது. எமது கலை கலாச்சாரத்தைப் பேணாது ஆங்கில கலாச்சாரத்தைப் பின்பற்றி வருகின்றனர். இதனால் எமது கலாச்சாரப் பண்பாடுகள் மறைந்து கலாச்சாரச் சீரழிவுகள் நடைபெற்று வருகின்றன என்று கவலைப்படும் எமது சான்றோர், இவ்விடயம் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இன்றைய நிலையில் ஆலயங்களில் தமிழ் மொழியின் பயன்பாடு எமது மொழியின் பாதுகாப்பிற்கும் சைவசமய வளர்ச்சிக்கும் மிகவும் இன்றியமையாதது என்பது எமது கருத்தாகும். இது இன்றைய காலத்தினுடைய தேவையுமாகும். எமது முன்னோர் இவற்றைப் பற்றி முன்னர் சிந்தித்திருந்தால் இப்படியான நிலை ஏற்பட்டிருக்கமாட்டாது.

நீண்ட காலமாகவிருந்து வந்த நிலமானிய சமூகக் கட்டுப்பாடுகளுக்கு அமைய, கல்வி அறிவு அற்றவர்களாய் இருந்த காலத்தில் இருந்து வந்த மூட நம்பிக்கைகளைத் தூக்கி எறிந்து விட்டு, எல்லோருக்கும் கல்வி என்ற அடிப்படையில் கல்வி கற்றுச் சிந்தனையாளரான எமது மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். கல்வி அறிவு விருத்தியடைந்து ஏற்பட்ட பகுத்தறிவு வளர்ச்சியால் பல விடயங்கள் கைவிடப்பட்டு வருகின்றன. ஆலயச் செயற்பாடுகளும் இதற்கு விதி விலக்கல்ல என உணர முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா்ணாச்சிரம தா்மங்கள் போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்களால் பல முன்னேற்றங்கள் எமது தமிழ் இனத்திற்கு ஏற்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டோர் கோவிலுக்குள் போகக் கூடாது என்ற விதிமுறைகள் இருந்து வந்தது. இது இன்று படிப்படியாக மாற்றமடைந்து வருகிறது. ஆண்டவனின் முன்னிலையில் அனைவரும் சமமே என்ற கருத்தே மேலோங்கியுள்ளது. பூசைகளும் தமிழ் மொழியில் நடந்தாக வேண்டும்; என்பது உலகில் வாழும் தமிழ் மக்களின் ஆவலாகும்.

நவீன தொழில் நுட்ப வளர்ச்சி உலக மொழிகளின் விருத்தியை பின்னுக்குத்தள்ளப் போகிறது. இது மொழிகள் ஆய்வாளர்களுக்குத்தான் தெரிந்த உண்மை. ஐந்து ஆறு வயதுப் பிள்ளைகள் கூட ஏன், எதற்கு, எப்படி என்று கேள்விகளைக் கேட்டு சிந்திக்கக் கூடிய சமுதாயம் இன்றைய சமுதாயமாகும். அதற்கு ஈடு கொடுக்கக் கூடிய மாற்றங்கள் ஏற்படக் கூடிய காலம் விரைவில் ஏற்படவுள்ளது. எமது மண்ணில் தமிழ் நிலைத்து நின்று ஆட்சி செய்யவும் சைவசமயம் வளர்ச்சியடையவும், எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற கொள்கைகளோடு தமிழ் வளரப் பாடுபடுவோமாக!

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ப் பண்பாடு!



**பாண்டிச்சேரியில் நடந்த உ.த.ப. இயக்கத்தின் 09ஆவது உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டில் உ.த.ப. இயக்கததின் இலங்கைத் தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் சிறப்புரை ஆற்றுவதைக் காணலாம். படதததில் இடமிருந்து வலமாக இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு பெ. சந்திரசேகரன், கவிஞர் நாகப்பா, கவிஞர். திரு. மன்னர் மன்னன், திரு கிரிஸ் கிஸ்ரன், திரு. சி. செல்லையா, திருமதி. செல்லையா ஆகியோர் காணப்படுகின்றனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவில் தமிழர்கள்

**-திருமதி. காமாட்சி சோதிநாதன்-**

நம் தமிழ் மக்கள் 1860 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் நாட்டிலிருந்து தென்னாபிரிக்காவுக்கு வந்து குடியேறினார்கள். அப்போது வெள்ளையர் ஆட்சி செய்து கொண்டிருந்தனர். கரும்புத் தோட்டங்களில் வேலை தொடங்கிய அவர்களுக்கு வேலைக்கேற்ற ஊதியம் கிடைக்காமல் இருந்தபோதும் தாய் மொழியாம் தமிழை காப்பதற்கும் வளர்ப்பதற்கும் பெரும்பாடு பட்டனர். தமிழிலுள்ள இயல், இசை, நாடகம் போன்றவற்றைப் பழகியும் பழக்கியும் கலைப் போட்டிகளை நிகழ்த்தி வந்தனர். அத்தோடு பேச்சுப்போட்டி, பாட்டுப் போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி வந்தார்கள். கோவில்கள் கட்டி வழிபாடு செய்து வந்தனர். நாடுகள் கண்டங்கள் கடந்து இங்கு வந்து குடியேறியபோதும் தமிழர்களுடைய பண்பாட்டு பழக்க வழக்கங்களைத் தொலைத்து விடாமல் இப்போதும் காத்துக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

1949 ஆம் ஆண்டு திருக்குறள் கழகம் தொடங்கினார்கள். அதில் ஆர்வமுள்ள இளைஞர்களும் முதியோர்களும் இணைந்து பொண்டனர். பொங்கல் விழா நடத்தும் போது திருக்குறள் பற்றியும் தமிழ் நாட்டு அறிஞர்கள் பற்றியும் அறிமுகம் செய்து திருக்குறளை பரவச் செய்து வந்தனர்.

**சாலையார் வீரப்பனார் வழிநடப்போம் வாரீர்**

யாழ்ப்பாணத்தில் 1974-ம் நான்காவது உலகத்தமிழர் மாநாட்டுக்கு நானும் எனது துனைவர் சோதிநாதனும் சென்றிருந்தோம். மாநாடு நடந்து முடிந்த பிறகு சாலையாரைச் சந்தித்தோம். யாழ்நகரில் ஒரு உணவு விடுதியில் கூடினோம் அங்குதான் சாலையார், கனகரத்தினம், காலம் சென்ற எனது துணைவர் சோதிநாதன். நான், சாலையாரின் துணைவியார் மற்றும் சிலரும் சேர்ந்து உலகத் தமிழ் பாண்பாட்டு இயக்கத்தை ஆரம்பித்தோம். இன்று இந்த இயக்கம் உலகம் முழுவதும் பரவி வருகிறது. தென்னாபிரிக்காவில் பத்து ஆண்டுகளாக திரு. அன்பன், திரு. கிறஸ்கிஸ்ரன் அவாகளோடு நானும் மற்றும் சில இனிய நண்பர்களும் இணைந்து உ.த.ப. இயக்கத்தை நடத்தி வந்தோம்.

வீரப்பனார் வருகை தெனனாபிரிக்கா தமிழ் மக்களுக்கு மேலும் பயனுள்ளதாக இருந்தது. அவர் பயணம் செய்த போதெல்லாம் ஆங்காங்கு சென்று தமிழ் மொழியின் பெருமைப்பற்றி எடுத்துக் கூறி தென்னாபிரிக்கா தமிழ் மக்களை ஊக்குவித்தார், இப்படியாக தமிழ் தமிழ் என்று பறை சாற்றி கொண்டு வந்த தமிழர்களை நம் தமிழ் சமூகம் இயற்கையின் அழைப்பால் இழந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வீரப்பனார் அவர்கள் அவர்களுடைய இறுதிக்காலத்தில் உலகத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் வெள்ளி விழாவை 1999 ஆம் ஆண்டு சென்னையில் அவருடைய தலைமையில் வெற்றியுடன் நிகழ்த்தினார். மிகுந்த நோய்வாய்ப்பட்டிருந்த போதும் மருத்துவ மனையில் தங்காமல் சிகிச்சை பெற்றுக் கொண்டு விழா முடியும் வரை இருந்தார். தமிழ் மீது அவருக்குள்ள ஆர்வமும் உணர்ச்சியும் இறுதி நேரத்தில் கூட குறையவில்லை. தன் நலம், தன் குடும்பமெனப் பார்க்காமல் தமிழுக்காக உழைத்த பேராசிரியர் வீரப்பனார் அவர்கள் மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றவர். சிறுகதை, கட்டுரை, தமிழ் வரலாற்று ஆய்வு, தமிழ் மொழி ஆய்வு மற்றும் பயணக் கட்டுரைகளை வெளியிட்டதோடு தென்னாபிரிக்காவில் 77 நாட்கள் என்ற ஓர் நூலையும் வெளியிட்டார். பல துறை படைப்புக்களை தமிழ் உலகுக்கு வழங்கியதோடு, தமிழுக்காக உழைத்தவர் சாவதில்லை என்பதை உணர்த்திய அவரின் வழியில் நாமும் செல்வோம்.

உலகத் தமிழர்களின் வாழ்க்கை நிலைமையை உணர்த்திய பேராசிரியர் வீரப்பனார் அவர்கள் உலகத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் தலைவராகவும் மலேசிய தமிழ் இலக்கியக் கழகத்தின் தலைவராகவும் சீரிய முறையில் தொண்டாற்றி, உலகத் தமிழர்களை ஒருங்கிணைத்துக் கொண்டிருக்கும் வேளையில் மறைந்தார்.

வீரப்பனார் மறைவுக்குப் பிறகு திரு. சி. செல்லையா அவர்கள் உ.த.ப. இயக்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தென்னாபிரிக்கா கூட்டிணைப்புக் கழகத்தோடு இணைந்து உ.த.ப. இயக்கத்தின் 8வது மாநாட்டை வெகு சிறப்பாக நடத்தி வெற்றி கண்டார். இம்மாநாட்டிற்கு பல நாடுகளிலிருந்தும் தமிழறிஞர்கள் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வீரப்பனார் அவர்களும் சாலை இளந்திரையனார் அவர்களும் செல்லுமிடமெல்லாம் தமிழழைப் பற்றியும் ஈழத்துத் தமிழர் படும் துயரங்கள், இன்னல்கள் ஈழத்துக்காய் அனைத்துத் தமிழர்களும் செய்ய வேண்டிய கடமைகள் குறித்தும் எடுத்துக் கூறினார்கள். தமிழ் பகையை வீழ்த்தி ஈழம் மலர்ந்திட அனைத்துத் தமிழரும் பாடுபடவேண்டும் எனவும் இடித்துரைத்தார்.

இவ்வேளையில், 30வது ஆண்டில் உ.த.ப. இயக்கம் காணும் 9வது மாநாடு சிறப்பாக வெற்றியடையவும் தென்னாபிரிக்கா தமிழ் மக்களின் சார்பில் வாழ்த்துவதோடு வீரப்பனார், சாலையார் வழியை அனைத்துத் தமிழ் மக்களும் பின்பற்ற வேண்டுமென்றும் விரும்புகிறேன்.

வாழ்க தமிழ்,வளர்க தமிழ்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

- பாவேந்தர் பாரதிதாசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழும், சிவநெறியும்

மதிவாணர் செ. மதுசூதன் - கோண்டாவில், யாழ்ப்பாணம்.



பன்னெடுங்காலங்களுக்கு முன்பிருந்தே பல தெய்வக் கொள்கையும், உருவ வழிபாடும் உலகின் பலபாகங்களிலும் காணப்பட்டன என்பது வரலாற்று உண்மை. இயற்கையின் ஒவ்வொரு சக்தியையும் தனித்தனியே தத்துவத் தெய்வங்களாக உருவகித்து வழிபட்ட பண்டைக்கால மக்கள், இவைகளின் மேலான ஒரு முழுமுதற் கடவுளிருகின்றார் எனவும் நம்பினார்கள். பலவிதமான வழிபடு முறைகள் உருவாக்கப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும் வந்துள்ளன. இவை மதங்கள் (சமயங்கள்) என வழங்கப்பட்டன. இவ்வாறு மதங்கள் சமூக அமைப்பில் வேறுபட்டு, பல தெய்வக் கொள்கையுடன் பல்வேறு நாடுகளிலும் பரவியிருந்தமை காணக்கூடியதாகவுள்ளது. இயேசுவும் முகமது நபியும் ஒரு தெய்வமே உண்டென்றார்கள்.

சமஸ்கிருதத்தை தாய்மொழியாகக் கொண்ட பண்டைக்கால இந்திய ஆரியர்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்று கூறப்படும் புனித அறிவு நூல்களை (நால்வேதம்) அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர். பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய முக்கிய தெய்வங்களையும் வழிபட்டனர். வாணிபம், வேளாண்மை, கலைகள், கல்வி, ஓவியம், கணிதம், வான நூலறிவு போன்றவற்றில் சிறந்து விளங்கினர்.

**சிந்துவெளியில் சிவவழிபாடு**

ஹரப்பா, மொகன்சதாரோ என்னும் பண்டைய சிந்துவெளி நாகரிக மக்கள், பழங்காலத்தில் புகழ்பெற்ற நாகரிக முடையவர்களாக வாழ்ந்தனர். சிவலிங்கங்களும், யோக நிலையில் நான்கு மிருகங்களால் சூழப்பட்டு மூன்று முகங்களையுடைய கடவுள் உருவமும் கண்டெடுக்கப்பட்டதிலிருந்து பசுபதியாகிய பரம சிவனை இம்மக்கள் வழிபட்டனர் என்பது அறியக்கிடக்கின்றது. இதுவே பிற்கால மூவிலைச் சூலத்தை வழிபடும் நிலைக்கு வந்தது எனவும் ஊகிக்கலாம். சிந்துவெளி நாகரிகத்திலிருந்தே சிவவழிபாட்டை இந்திய ஆரியர்கள் ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படுவதால், சிவன் தமிழர்களின் வழிபடு தெய்வமாக விளங்கியமை பெறப்படுகின்றது. ஐந்தொழில்களுக்கும் (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) அதிபதியாக விளங்கிய சிவனையே ஆரியர்கள் தமது அழித்தல் தொழில் செய்யும் உருத்திரனோடு ஒப்பிட்டார்கள். இந்தச் சிவவழிபாடே சிவலிங்கத்திலிருந்து பரிணாம வளர்ச்சிமுறையில் மாதொருபாகனாகி (அர்த்த நாரீஸ்வரர்) சிவன், உமை என்று விரிவடைந்தமை உற்று நோக்கத் தக்கது. இச் சிவலிங்க வழிபாடு இருக்கு வேத காலத்திற்கும் முற்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபிலோனியர் வழிபட்ட பல தெய்வங்களுள் மர்டுக் என்பது முக்கிய தெய்வமாம். இவர்கள் கோபுரங்களையுடைய கோவில்கள் பல கட்டினர். வான நூலறிவில் வல்லுனர்களாகத் திகழ்ந்த இவர்களே சோதிடக் கலைக்கு வித்திட்டவர்களாவர்.

ஆசிரியர்கள் பல கடவுள்களை வழிபட்டனர். 'அசுர்', 'இஸ்டர்' ஆகியன முக்கிய தெய்வங்கள். கோபுரங்களையுடைய கோவில்களைக் கட்டிய தோடு, சோதிடத்திலும் நம்பிக்கை வைத்திருந்தனர். மத சகிப்புத் தன்மையுடைய பாரசீகர்கள் உலகில் நன்மை, தீமை என்னும் இரு சக்திகளிருப்பததாகவும், நற்செயலின் ஒளித்தெய்வம் ஆர்மஸ்ட் என்றும் தீச் செயல்களின் இருட்கடவுள் 'அரிமான்' என்றும், உருவமற்ற ஒரே இறைவனே இவ்வாறு சக்திப் பொருளாய்க் காட்சியளிக்கிறார் என்றும் கருதினார்கள்.

கிரீட் இன மக்கள் இரு கோடரிகளைச் சின்னமாகவுள்ள 'ரியா' என்னும் இயற்கைக் கடவுளை வழிபட்டனர். கைத் தொழில், வேளாண்மை, ஓவியங்களிற் சிறந்து விளங்கினர்.

பண்டைய எகிப்தியர்கள் எண்ணற்ற தெய்வங்களை வழிபட்டனர். இரா, இஸிஸ், ஓரஸ், ஆசிரிஸ் ஆகியவை பெரும்பாலரால் வழிபடப்பட்டன. ஆவியின் அழியாத் தன்மையில் நம்பிக்கையுடைய இவர்கள், கல்வி, இலக்கியம், விஞ்ஞானம், கணிதம், மருத்துவம், வான நூலறிவு போன்றவற்றில் முன்னேற்றம் எய்தியிருந்தனர்.

## இலங்கைத் தமிழர்கள் முதாதையர்கள்

சுமேரியர்கள் பல கடவுளர்களை வழிபட்டனர். 'என்லில்' அவர்களுடைய முக்கிய தெய்வம். இதற்குக் கோவில்கள் பல கட்டப்பட்டிருந்தன. விண் மீன்கள், கோள்கள் ஆகியவற்றின் நிலைகளை ஆராய்ந்து, வருங்காலத்தை ஊகித்தறியும் திறமை கொண்டிருந்தனர். எகிப்தியரைப் போன்று மரணத்தின் பின் உள்ள வாழ்க்கையில் இவர்களும் நம்பிக்கை கொண்டிருந்தனர். யூபிரட்டிஸ் டைகிரிஸ் என்ற இரு நதிகளின் பள்ளத்தாக்கில் மொசப்பத்தேமியா என வழங்கப்பட்ட பபிலோன் நாடு சாஸ்தியர் என்ற சாதியர் வாழ்ந்த காரணத்தால் சால்டியா எனவும் வழங்கப்பட்டது. இப்பிலோனியாவில் குடியேறிய புராதன சாதியார். இலங்கைத்தமிழர்களின் முதாதையர் எனக் கருதப்படுகின்ற சுமேரியராவர். இவர்கள் ஆறுகளிலிருந்து பெரிய வாய்க்கால்களை வெட்டி விவசாயம் செய்தார்கள். உலோகங்களால் செய்த ஆயுதங்களை உபயோகித்துப் பெரிய கோவில்களைக் கட்டினார்கள். தெய்வங்களின் உருவங்களைச் செதுக்கினார்கள். எழுதும் வித்தையை (சித்திரரூப எழுத்துக்களை) முதன் முதலில் விருத்தி பண்ணினார்கள். ஒருநாளை இருபத்து நான்கு மணித்தியாலங்களாகவும், ஒரு மணித்தியாலத்தை அறுபது நிமிடங்களாகவும் முதன்முதலில் பிரித்தவர்கள் சுமேரியர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேடர்கள்

ஆதியில் இலங்கையின் வடமத்திய, கிழக்கு ஊவா மாகாணப் பகுதிகளில் குகைகளிலும், குடிசைகளிலும் வாழ்ந்து வேட்டையாடுதலையே தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டு வாழந்த ஐந்தடிக்கும் குறைவான உருவத்திற் சிறியவராயும், குறுகிய தோற்றமுடையவராயும், நீண்ட தலையும், சப்பை மூக்கும் சுருண்ட மயிரும் உடையவர்ளாயும் காணப்பட்டவர்களே அக்காலத்தில் வேடர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் தென் புலத்தார் வழிபாட்டையே மேற்கொண்டு வாழ்ந்தார்கள். விஜயன் மணந்த குவேனியாகிய இயக்கிக்குப் பிறந்தவர்களின் பரம்பரையே வேடர்கள் என்று புராதன சிங்களர் கூறினராயினும், இச்சாதியார் மிகப்பழைய காலந்தொட்டே தென்னிந்தியாவில் இருந்துள்ளமையினால் இலங்கைக்குச் சிங்களவர் வருவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அவர்கள் இலங்கையில் வந்து குடியேறினார்கள் என்று கொள்ள இடமுண்டு. வேடர் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் தொன்மை வாய்ந்த கதிர்காமத்தேவாலயம் தென்னிலங்கையில் காணப்படுகின்றது.

## சமணமும் பௌத்தமும்

கி.மு. 539 – 467 இல் வர்த்தமான மகாவீரர் (ஜினர்) மகத நாட்டை பிம்பிசாரரும், அஜாதசத்துருவும் ஆண்ட காலத்தில், தூய நம்பிக்கை, தூய அறிவு, தூய நடத்தை என்ற மூன்றையும் அடிப்படையாகக் கொண்ட ஜைன மதத்தை நிறுவினார். வாழும் உயிரினங்களிடம் மனிதன் கருணை காட்டுவதே சிறந்த அறம் என்றுரைத்த இச்ஜைன மதத்தினர் நாளடையில் சுவேதம்பரர், திகம்பரர் என்னும் இரு பிரிவினராயினர். தமிழ்நாட்டில் இம்மதமே சமணம் என்ற பெயரில் பரவியிருந்தது.

கபிலவஸ்துவில் சுத்தோதனன் என்ற சாக்கிய மன்னருக்கு மகனாகப் பிறந்த சித்தாத்தர் யசோதரையை மணந்து, இராகுலன் என்ற ஆண் மகவைப் பெற்றெடுத்த பின்னர், உலக வாழ்க்கையைத் துறந்து இரண்டு துறவிகளிடம் உபதேசம் பெற்றார். அவர்களுடைய போதனைகள் அவருக்குத் திருப்தி அளிக்காமையினால் ஆறுவருடங்கள் கடும்தவம் புரிந்தார். அதுவும் அவருக்குத் திருப்தி தரவில்லை. பின்னர் காயா தேசத்து அரசமர நிழலில் யோகத்திலாழ்ந்து நிட்டை கூடியிருந்து வைகாசிப் பூரணையில் மெய்யுணர்வு (ஞானம்) பெற்றுப் புத்தரானார். உயிர்க்கொலை கூடாதெனவும், மிருகங்களைக் கொன்று வேள்வி செய்வது பாவமெனவும், பிறப்பினால் உயர்வு தாழ்வு கூறிச் சாதி வேறுபாடு காட்டக்கூடாதெனவும், பிறப்பும் இறப்பும் கொண்ட மானிட வாழ்க்கை துன்பமானதென்றும், ஆசையே துன்பத்திற்குக் காரணமென்றும், ஆசையை ஒழித்தல் பிறவிக் கடலிலிருந்து விடுபட்டு மோட்சம் பெறவழியென்றும் அதுவே நிர்வாணம் என்றும் போதித்தார். கி.மு. 483 இல் வைகாசிப் பூரணையில் அவர் பரிநிர்வாண மடைந்தபின்னர், அவருடைய சீடர்கள் அவரின் போதனைகளை உலகெங்கும் பரப்பினார்கள், பௌத்தமதம் உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத நாட்டையாண்ட பிம்பிசாரரும், அஜாத சத்துருவும், புத்தரின் போதனைகளைக் கைக்கொண்டனர். அசோகன், கனிஷ்கர் போன்ற பின்வந்த அரசர்களால் இம்மதம் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பரவியது. அசோக மன்னர் தனது மகனாகிய மகிந்தனையும், மகளாகிய சங்கமித்தையையும் இலங்கைக்கு அனுப்பிப் பௌத்தத்தைப் பரப்பினான். அக்காலத்தில் இலங்கைக்கு அரசனாயிருந்த தேவநம்பிய தீசனும் அவனது பிரசைகளும் இப்புதிய மதத்தைத் தழுவிக் கொண்டார்கள் சிங்களமொழியுடன் நெருங்கிய தொடர்புள்ளதான ஓர் ஆரியமொழியை மகிந்தன் தாய்மொழியாகக் கொண்டிருந்ததால், மொழிக் கஷ்டமின்றி வெகு இலகுவாகப் பௌத்த போதனைகளைப் பரப்பினான். அருகதக் கொள்கையுடைய ஹீனஞானம் தேரவாதம், மகாயானம் என்ற மூன்று வகையில் பௌத்தம் இலங்கையில் விளங்கியது. தமிழகத்தில் அறுவகைத் தேரர்கள் (ஆறு பிரிவு) வாழ்ந்தார்கள்.

## மகாயான பௌத்தம்

கனிஷ்கர் ஆட்சியில், நாகார்ச்சுனர் என்னும் புலவர் புத்தமதத்தில் சில மாற்றங்களையுண்டாக்கி மகாயானம் என்ற புதிய புத்த மதத்தை உருவாக்கினார். புத்தரையும் போதிசத்துவர்களையும் தெய்வமாக வழிபடும், உரு வழிபாடு, பிரார்த்தனை பக்தி தூய ஒழுக்கம் என்பன மகாயானத்தில் வலியுறுத்தப்பட்டன. புத்தருக்குக் கோயில்களும் கட்டப்பட்டன. போதிசத்துவர்களுள் முதன்மை பெற்றவர்களை நாதர் என்னும் அவலோகிதேஸ்வரர் என்றும் கூறுவதுண்டு. பழைய புத்த மதம் ஹீனஞானம் எனப்பட்டது. அதில் புத்தர் போதித்த கொள்கைகளைப் பின்பற்றி வாழும் தூயவாழ்க்கையே வலியுறுத்தப்பட்டது.

மகாயான பௌத்தமத ஸ்தாபகராகிய நாகர்த்தனர் என்பவர் பிராமண குலத்தில் பிறந்து மந்திர வித்தைகளிற் கைதேர்ந்தவரென்றும் தன்னைப் பிறர் கண்களுக்குத் தோற்றாமற் செய்து கொள்ளும் மந்திர சக்தி வாய்ந்தவரென்றும் பல கதைகளுண்டு. மகாயான பௌத்தத்தை விளக்கும் பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். இந்நூல்கள் ஆரியமொழியாகிய சமஸ்கிருதத்திலேயே எழுதப்பட்டன.

ஆசிரியாவின் பல்வேறு பகுதிகளிலும் புத்தமதம் பரவியது. புத்தமதத்தின் எதிரொலியாக வடஇந்தியாவில் விளங்கிய வேத நெறியில் பெரும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. புத்த மதத்தின்த சீரிய கொள்கைகளைத் தன்னுள் அது ஏற்றுக்கொண்டது. மடங்கள் நிறுவுப்பட்டன. மத காரியங்களுக்குப் பல்வேறு மக்களின் தாய்மொழிகள் பயன்படுத்தப்பட்டன.

## தமிழகத்தில் வழிபாடு

இந்தியாவில் தோன்றிய பல்வேறு மதங்களும் பல தெய்வக் கொள்கைகளும் இந்துமதம் என்ற பெயரில் தற்போது ஒன்றிணைக்கப்பட்டு விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவில் அன்று வட வேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் நிலங்களுக்குரியதாகத் தெய்வங்கள் குறிக்கப்பட்டு வழக்கிலிருந்ததாக தொல்காப்பியம் தெரிவிக்கின்றது. "மாயோன் மேய காடுறை உலகமும், சேயோன் மேயமைவரை உலகமும், வேந்தன் மேய தீம்புனல் உலகமும், வருணன் மேய பெருமணல் உலகமும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய முறையில் சொல்லவும் படுமே" என்பது தொல்காப்பியம்.

"பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும், வால்வளை மேனிவாலியோன் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும், மாலை வெண்குடை மன்னவன் கோயிலும், மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ நான்மறை மரபின் தீமுறை ஒருபால் என்றும், நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும், பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து வேறு வேறு கடவுளர் சாறு சிறந்தது ஒரு பால் என்றும் அறிவோர் பள்ளியும், அறன் ஓம்படையும், பிறநிலைக் கோட்டத்துப் புண்ணியத்தானமும் திறவோர் உரைக்குஞ் செயல் சிறந்து ஒரு பால் என்றும் விண்ணவர் தலைவனை (இந்திரனை) விழு நீர் ஆட்டினர்" என்றும் சிலப்பதிகாரம் கூறுவதும் கூர்ந்து நோக்கத்தக்கது.

மணிமேகலை வஞ்சி மாநாகரினுள் சென்று அவ்விடத்தேயுள்ள சமயக்கணக்கர்களாகிய அளவை வாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசீவகவாதி, நிகண்டாவாதி, சர்வகியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி ஆகிய பலரும் கூறிய சமயத்து நுண்பொருள்களை உரைக்கக் கேட்டு அவற்றை அறிந்தவனாய், அவற்றில் திருப்தி கொள்ளாது கச்சிமாநகர் புக்கு அறவணவடிகள் என்ற பௌத்தத் துறவியின் அருளுரைகேட்டுத் தெளிவு பெற்று தவத்தின் கூறுகளைப் பூண்டவனாயினாள்" என்று மணிமேகலை என்ற காப்பியம் செய்யும் செய்திகளும் கருத்தில் கொள்ளத்தக்கன.

தமிழ்நாட்டில் சிறப்பாக ஆறுபடை வீடுகள் கொண்ட முருகக் கடவுளை "நெடும்பெரும் சிமயத்து நீலப் பைஞ்சுனை ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப அறுவர் பயந்த ஆறுமர் செல்வ, ஆல்கெழு கடவுள் புதல்வ, மால்வரை மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே, வெற்றி வேல்போர்க் கொற்றவை சிறுவ, இழை அணி சிறப்பின் பழையோன் குழவி, வானோர் வணங்கு வில்தனைத் தலைவ, மாலை மார்ப, நூல் அறி புலவ, செருவில் ஒருவ, பொருவிறல், மள்ள, அந்தணர் வெறுக்கை, அறிந்தோர் சொல்மலை மங்கையர், கணவ, மைந்தர், ஏறே, வேல்கெழு தடக்கைச் கால் பொரும் செல்வ, குன்றம், கொன்ற குன்றாக் கொற்றத்து விண் பொருநெடுவரைக் குறிஞ்சிக் கிழவ பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே, அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருக" என்று திருமுருகாற்றுப்படை தெரிவிப்பதும் ஈண்டு நோக்கத்தக்கது.

**சங்ககாலம்**

சங்ககாலத்திலும், சங்க மருவிய காலத்திலும், தமிழகத்தில் வைவமும் வைணவமும், சமணமும், பௌத்தமும் ஆரியர்களின் வேதநெறியும் பரவியிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் என்றும், கணபதி வழிபாடு பற்றிய செய்திகள் பண்டைத் தமிழ் நூல்களிற் காணப்படவில்லை. சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு சிவலிங்க வழிபா டாற்றிய தமிழர்களின் சைவநெறிக்கும், மும்மூர்த்திகளின் வழிபாடாற்றிய ஆரியர்களின் வேதநெறிக்கும் இடையில் வேறுபாடுகள் பெருமளவில் காணப்பட்டன. திருநீறணிந்த இராவணனின் (சிவநெறி) சிவலிங்க வழிபாட்டிற்கு நெற்றியில் நாமம் தரித்த (திருமாலின் அவதாரம் எனப் போற்றப்படும்) இராமனின் சிவலிங்க வழிபாட்டிற்கும் வேறுபாடுண்டென விளம்புவர். வைதீக சைவத்திற்கும், தாந்திரிக சைவத்திற்கும் உள்ள வேறுபாடு இங்கு காணப்படுகின்றது. தமிழகத்தில் ஆதியிலிருந்த சைவமும் வைணவமும் மாற்று மதங்களினதும் வடமொழியினதும் வருகையால் சிதைவுற்றன. ஆதிசைவர்களும் புறக்கணிக்கப்பட்டு வேதியர் ஆதிக்கம் வலுவுற்றது.

## வைதீக சைவம்

வேத வழிபாடு பிற்காலத்தில் தத்துியற்ற வேதியர்களைச் சென்றடைந்து வடமொழி ஆதிக்கம் ஒருபுறமிருக்கச் சமண, பௌத்தமதங்களின் ஆதிக்கம் வேதியர்களையும், வெறுப் புறவைத்தது. இந்நிலையில் சைவமும் தமிழும் மங்கிவரு தையுணர்ந்த ஒரு சிலர் முன்வந்து பக்தி மார்க்கத்தை ஏற்படுத்தினார்கள். சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும், தமிழ்மொழி மூலம், தத்தமது, நெறிகளைப் பேணமுன் வந்தார்கள். அந்தவகையில், சிறப்புப் பெற்ற மேலான சைவநெறி தமிழகத்தில் விளங்குவதற்கும், சைவத்தோடிணையக் கூடிய வேத நெறி தழைக்கவும், திருஞானசம்பந்தர் தேவாரம் பாடினார். சமணத்தைத் துறந்த அப்பரும், சுந்தரரும், மணிவாசகரும், நற்றமிழால் நாதன் தாள் போற்றினார்கள். வேதாந்தத்துட்பொருளையும், சித்தாந்தத் தெளிவையும் நாதாந்தத்தால் நமக்கு அருளினார்கள். சிறுமதியாளர்களால் சிதைக்கப்பட்ட சித்தாந்தச் சிவநெறி புத்துயிர்பெற்றது. திருநீறும், திருவைந்தெழுத்தும் தெய்வத்தைத் தெரிய வைத்தன.

## சைவசித்தாந்தம்

பதி, பசு, பாச உண்மைகளை விளக்'குவது சைவ சித்தாந்தம். ஆயபதிதான் அருட்சிவலிங்கமாம், ஆயபசுவும் அடலேறென நிற்கும், ஆயபலிபீடமாகுநற் பாசமாம், ஆய அரனிலையாய்ந்து கொள்வார்கட்கே" என்று திருமூலர் இதனை விளக்குகின்றார். "ஆகின்ற தொண்ணூறோடாறும் பொது என்பர். ஆகின்ற வாறாறருஞ்சைவர் தத்துவம் ஆகின்ற நாவேழ் வேதாந்தி, வயினாவர்க்காகின்ற நாலாறையைந்து மாயாவாதிக்கே" என்றும் தத்துவ விளக்கம் தருகின்றார் திருமூலர். சைவர்களின் தத்துவங்கள் முப்பத்தாறு என மொழியப்பட்டுள்ளமை காண்க. அவையாவன நாதம் விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை (சிவதத்துவங்கள் ஐந்து) காலம், நியதி கலை, வித்தை, அராகம், புருடன், மாயை (வித்தியாதத்துவங்கள் ஏழு) என்பவற்றுடன், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்கள் நான்கும், கண், காது, துவக்கு, நாக்கு, மூக்கு ஆகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும் வாய், கால், பாயு, உபத்தம் என்கின்ற கர்மேந்திரியங்கள் ஐந்தும் சத்தம், பரிசம், ரூபம், ரசம் கந்தம் எனப்படும் தன் மாத்திரைகள் ஐந்தும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பூதங்கள் ஐந்தும் அடங்கிய இருபத்து நான்கு ஆத்தும தத்துவங்களும் சேர்ந்துள்ளனவாகும். இவற்றின் விளக்கம் சைவசித்தாந்த சாத்திர நூல்களில் உள்ளன. ஆகவே திருமுறைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்றுச் செந்தமிழையும், சிவநெறியையும் பேணு வோமாக ! ஆறாறையும் நீத்ததன் மேனிலையை அடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பண்பாடு

**பேரறிஞர் வைத்திய கலாநிதி க. பாலசுப்பிரமணியம்**
**தவிசாளர், இலங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றம், சுன்னாகம்.**



பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தோன்றியது தமிழ் இனம். படிப்படியாக நாகரிகமடைந்து சீர்திருத்தமுள்ள வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். தமிழ் மக்கள் தமக்கென தனியாக ஒரு மரபினைக் கொண்டிருந்தனர். தமிழ்ப்பண்பு மிக்கோர் உயர்ந்தவராகக் கருதப்பட்டனர். பண்பாளர், சான்றோர் என பண்புமிக்குடையோர் அழைக்கப்பட்டனர். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு. உலகத்தில் மனித விழுமியங்களை உயர்வாக மதித்து நடப்பது சான்றோர் வழக்கம். மானிட சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் நன்மை பயக்கக்கூடிய ஒழுக்கம், நடத்தை, சிந்தனை, நோக்கம், செயற்பாடு, தொழில், பழக்கவழக்கங்கள் மேலான மனிதப்பண்புகளாக மதித்துப் போற்றப்பட்டு வந்தன.

இதனையே மக்கள் திலகம் மாண்புமிகு முதலமைச்சர் இராமச்சந்திரன் எமது சிந்தனை, பேச்சு, செயல் எல்லாமே மக்களுக்கு நன்மை விளைவிப்பவையாக இருத்தல் வேண்டும் என்றார். தமிழர் வாழ்க்கையை நான்கு பகுதிகளாக கண்டார்கள் அவை அறம், பொருள், இன்பம், வீடு ஆகும். அறம் இரு வகைப்படும் அவை இல்லறம், துறவறம் எனப்படும். அவற்றுள் இல்லறமே மிகவும் சிறந்தது. அறம் இல்லாமல் பொருள் இல்லை. பொருள் இல்லாது இன்பமில்லை. இன்பமின்றி வீடு இல்லை. சித்தத்தினுள்ளே சிவனைக் கண்டார்கள். சீவனுக்குள்ளே சிவனைக் கண்டார்கள்.

நிலத்தினை ஐந்தாக வகுத்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளாகும். நிலத்திற்கொரு பழக்கவழக்க பண்பாட்டினைக் கொண்டிருந்தார்கள். திணைக்கொருபண், பறை, யாழ்கொண்டு இசை பாடினார்கள். குறிஞ்சி நிலத்தில் தொண்டகம் என்ற பறையும், குறிஞ்சி யாழும் கொண்டு குறிஞ்சிப்பண் பாடினார்கள். ஏற்றுப்பறையும் முல்லை யாழும் கொண்டு சாதாரி பண்ணை முல்லை நிலத்தில் பாடினார்கள். மருதநிலத்தில் இணைமுழவும் மருத யாழும் பாவித்து மருதப்பண் பாடினார்கள். கோட்பறை நாவாய் பறையை முழக்கி விளரி யாழ் வாசித்து செவ்வழிப்பண்ணை நெய்தல் மண்ணில் பாடினர். பாலை நிலத்தில் துடிப்பறை, பாலை யாழ் பஞ்சுரம் என்ற பண்ணும் வழக்கத்திலிருந்தன.

மக்களைக் குடிகளாகக் கொண்டு மன்னன் முடியாட்சி நடத்தினான். குடிகளை பதினெட்டாக வகுத்தனர். அரசவையிலே ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொரு உறுப்பினர் குடித்தலைவர்கள் அமர்ந்து நல்லாட்சி செய்தார்கள். குடித்தலைவன் பெருமகன் என விழிக்கப்பட்டான். அரசன் ஆட்சிக்கு உதவியாக மக்களின் ஐம்பெருங்குழுவும் எண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராயமும் இருந்தன. மக்கள் குழு (பெருமக்கள்) அறவோர் குழு (புலவர்), மருத்தர் குழு (மருத்தவர் குழு), நிமித்தர் குழு (சோதிடர் குழு), அமைச்சர் குழு, ஆகியவை ஐம்பெருங்குழுவினர் எனலாம். எண்பேராயம் என்பதும் அமைச்சர், கணக்கர், அரண்மனை செயலர், சேனாதிபதி, ஒற்றர், வாயிற்காப்பாளர் (அரண்மனைக் காவலர்) யானை வீரர், குதிரை வீரர் ஆகியோர்.

தமிழை மூன்றாகப் பிரித்து இயல், இசை, நாடகம் என்றனர். இயல்பாக எழுதுவது இயற்றமிழ். ஓசை நயத்தோடும் இனிமையாக இசைப்பது இசைத்தமிழ் நாட்டின் கலை கலாச்சாரம் மரபு என்பவற்றையும், நாட்டு நடப்புக்களையும் எடுத்துக்காட்டி ஆடிப்பாடுதல் நாட்டியம் - நாடகம் ஆகும். தமிழ் இலக்கியம் தொண்ணூற்றாறு பிரபந்த வகைகளைக் கொண்டுள்ளது. அவற்றை மறந்து நாவல், சிறுகதை, புதுக்கவிதை என்பன தற்கால மேடைகளை ஆக்கிரமிக்கின்றன. தமிழில் அகத்தியம், தொல்காப்பியம், ஐந்திரம், நேமிநாதம் எனப் பல இலக்கணங்கள் உள்ளன. காகம் அன்னத்தைப் பார்த்து நடக்கலாம். அன்னம் காகத்தைப் பார்த்து நடக்க முற்படலாமா?

இவை அந்நிய சக்திகளின் ஊடுருவலின் விளைவா? தமிழினத்தை அழிக்கும் சதியா? இனம் வாழ வேண்டுமானால் அதன் தனித்தன்மை, கலை, மொழி,மரபுகள் பேணப்பட வேண்டும். அவற்றை அழித்துவிட்டால் இனம் தானாகவே அழிந்துவிடும். கல்வியை அழித்துவிட்டால், கலைகள், மொழி, தனித்தன்மை மரபுகள் அழிந்து விடும். ஆகவே மொழியின் தனித்தன்மை பேணப்படுகிற வகையிலே தமிழ் இலக்கியங்களை உருவாக்க வேண்டும். தமிழரின் உண்மை வரலாறுகளை இலக்கியங்களாக எழுதுதல் வேண்டும். தமிழியத்தின் மீது பற்றுக் கொண்டு தமிழைத் தமிழாகப் பேசுதல் வேண்டும். எழுதுதல் வேண்டும். தமிழ்ப் பண்பு, தமிழ் மரபு, தமிழ் நாகரிகம், தமிழ்ப் பாரம்பரியம், தமிழ் வரலாறு இலக்கியங்கள் கொண்டிருத்தல் வேண்டும். தமிழை வளர்க்க வேண்டியது தமிழர் கடமையாகும்.

இசைத்தமிழ் சிவன் செய்த அருஞ்சாதனை. உருத்திர வீணையை மீட்டி பாடி ஆடுகிறார். தமிழ்ப்பண்கள் 11991 இருந்தன. தாய்ப்பண்கள் 108 என்று அதில் பிங்கலந்தையில் 103 பண்கள் காணப்படுகின்றன. தமிழ்ப் பண்ணோடு பாடப்பட்டவை தமிழ்ப் பாக்கள் இசைக்காகத் தனியிலக்கணம் கண்டவர்கள் தமிழர். முதுகுருகு, முதுநாரை, இசைநுணுக்கம், இராவணியம், யாழ்நூல் ஆகிய இசையிலக்கண நூல்கள் இருந்தன. தமிழிசை மக்களை, விலங்குகளை, தாவரங்களை, விண், வளி, தீ, நீர், மண்ணை இசைய வைத்தது. தேனினும் இனிய தமிழிசையால் சுந்தரர் இறைவனை ஏவல் கொண்டார். ஒப்பரிய தமிழிசையை மறந்து, தாய் தமிழை மறந்து தமிழ் மண்ணில் தமிழர் பிற மொழிப் பாடல்களைப் பாடுவது முறையா? தமிழ் தாய்க்கு செய்யும் வஞ்சனை இல்லையா? யாமறிந்த மொழிகளிலே இனிதாவது எங்கும் காணோம் என்று இந்திய மொழிகள் பல தெரிந்த சுப்பிரமணிய பாரதி பாடினான்.

உலக மொழிகள் பலவற்றைக் கற்ற தனிநாயக அடிகளார் யாமறிந்த மொழிகளிலே இனிதாவது எங்கும் காணேன் என்றார். நிறைகுடம் தளம்பாது. புலவர் போய் கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டார். வட மொழிக்கவி இரட்டை அர்த்தம் கொண்டுள்ளது. ஒன்று பாடலை யியற்றுபவர். மற்றது குரங்கு. இரண்டும் பொருந்தும். இலக்கணம் இலகுவாகக் கிடைக்க வேண்டும். இலக்கணமில்லாமல் பழகுவது புதுக்கவிதை. சிறந்த இசையில க்கணத்தைக் கொண்டுள்ள தமிழர்கள் இலக்கணமில்லாமல் ஏன் பாடவேண்டும். இவர்களுக்கு இலக்கணம் வராதா?

சங்கீதம், கருநாடக சங்கீதம் என்றெல்லாம் சிலர் நளினமாக அதனை உயர்வென்றெண்ணிப் பேசுவதை நாம் காண்கிறோம். தமிழ் வாயில் வராத தமிழர்கள் தமிழர்களா? யாராவது இசை மரபினை அறியாமல் ஒழுங்கில்லாமல் பாடினால் ஏன் கரடி கத்துமாப் போல கத்துகிறாய் என்று இசையாளர் நகைப்பது நாட்டிலுள்ள வழக்கு சங்கீத விற்பன்னரை ஜாம்பவான் என்று புகழ்ந்துரைக்கும் வழக்கம் பிறமொழிகளில் உண்டு. ஜாம்பவான் என்றால் கரடி. தமிழர் பிற மொழியிசையை நகைப்பிற்குரியதாகவே ஆதியில் கருதினார்கள். தமிழ்க் கீர்த்தனைகள் நூற்றுக்கணக்கில் இருக்க தெலுங்கு கீர்த்தனைகள் தேவையா? பாடுவது தமிழர் கேட்பது தமிழர், பாடப்படுவது தமிழ் மண்ணில் பிறமொழி என்ன தமிழைவிட உயர்ந்ததா? இல்லை. அரசு கட்டுப்படுத்துகிறதா? தமிழர் இதயத்தை இழந்து விட்டனரா?

இலக்கணமாக உடுத்தத் தெரியாமல் ஏணல் கோணலாக அணிந்து வந்தால் அவரைப் பார்த்து என்ன சுத்தக் கருநாடகம் ஆக இருக்கிறார் என்று பழிப்பார். கருநாடகம் கேலிக்குரியதாகக் கருதப்பட்டது. கரடியும் குரங்கும் இயற்றிய சங்கீதத்தையா தமிழர் பாடவேண்டும். இந்த இழிநிலை இசைக்கலைஞருக்கு வரலாமா? பகுத்தறிவும், பட்டறிவும் எங்கே?

நாடகம் என்றால் உள்ளே நாடு உள்ளது, நாட்டினைப் பார்க்கலாம். நாட்டு இயம் தான் நாட்டியம் ஆனது. நாடகத்தமிழ் தனியிலக்கணம் கொண்டது. அந்த இலக்கணத்தில் நாடகங்கள் இயற்றப்பட வேண்டும். நடிக்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியத்தினை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவதாக நாடகங்கள் அமைய வேண்டும். நாடகத்திற்கும் புத்துயிர் அளித்தவர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள். தமிழ்ப்பாணியை மறந்து பிறமோடிகளா? சொந்த நாடகப் பண்புகளை இழப்பதா? மயிலைப் பார்த்து வான்கோழி ஆடிய காலம் மாறி வான் கோழியைப் பார்த்து மயில்கள் ஆடவா? மயில் ஆட வான் கோழி தடைசெய்வதோ? கூத்தும் நாடகமும் வெவ்வேறாகும். ஆடிக்காட்டுவது கூத்து. நடித்துக்காட்டுவது நாடகம். நாக நாட்டியம், பல்லவ நாட்டியம் மறைந்துவிட்டது. தமிழ் நாட்டிய நூல் பரதம் அழிந்தது. பாரத நாட்டிய மோகமா? தமிழ்ப் பரதக்கலை மாற்று வடிவத்தில் பாவராக தாளக்கலை எனப்படுகிறது. பண், ரசம், தண்ணுனம் கொண்ட தமிழர்களின் பரதம் - பரதநாட்டியம் எங்கே? நாட்டியக்கலைஞர்கள் தமிழ்ப் பரதநாட்டியம், நாகநாட்டியம், பல்லவநாட்டியம் மீண்டும் தமிழ் மண்ணில் மலர உதவ வேண்டும்.

தமிழிசைக்கருவிகள் மறைந்தும் மறக்கப்பட்டும் வருகின்றன. மிகவும் நுணுக்கமான ஒலிகளை எழுப்பக்கூடிய பல்வேறு தமிழ் இசைக்கருவிகள் இன்று புழக்கத்தில் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தளம், உடுக்கு, பறை, பேரிகை, முழவு, தாரை, தப்பட்டை, வீணை, யாழ், குழல், நாகசின்னம், தவில், ஒத்து, கொம்பு வாத்தியம், பம்பை, நையாண்டி மேளம், முரசு தமிழிசைக்கருவிகளுட் சிலவாகும். வீணையை எடுத்துக் கொண்டால் இராவணவீணை, உருத்திரவீணை, முகவீணை எனப்பலவாகும்.

யாழினை எடுத்துக்கொண்டால் அதில் பலவகை உண்டு. அவை பேரியாழ், சிறுயாழ், பெருங்கோட்டியாழ், சகோடயாழ், முல்லையாழ், குறிஞ்சி யாழ், மருதயாழ், விளரியாழ், பாலை யாழ் என்பனவாகும். இவை மீண்டும் இசையில் பயன்படுத்தப்பட வேண்டும். நவீன தொழில் நுட்பங்களைப் புகுத்தினாலும் எங்கள் தனித்தன்மைகளை இழக்கக்கூடாது. தமிழிலுள்ள நாட்டுப் பாடல்கள் எல்லாம் தமிழிசைப்பாடல்களே. தேவார, திருவாசக, திருப்புகழ் எல்லாம் தமிழிசைப் பாடல்களே.

தமிழ்ப்பண் ஒவ்வொன்றுக்கும் தனித்தன்மை உண்டு. பாரிய விளைவுகளை ஏற்படுத்த வல்லவை. புறநீர்மை பாடினால் விடிகிறது. மேகராச குறிஞ்சி பாடினால் இருள்கிறது. மங்கள கருமங்களுக்கு மங்கலப்பண்கள் பதினாறு பாடினார்கள். பகலிலே பாடப்படும் பண்கள் - 10 பகற் பண்கள் என்றும் இரவிலே பாடப்படும் பண்கள் 8 இராப்பண்கள் என்றும் அழைக்கப்பட்டன. 4 பொதுப் பண்களும் உள்ளன.

பண்கள் கர்த்தாராகம் எனப்படுகின்றன. திறம் ஜன்யராகம் எனப்படும். பதம் சுரம் எனப்படுகிறது. தமிழிசை கர்நாடகத்தில் சில மாற்றங்களுடன் கருநாடக சங்கீதம் என்று அழைக்கப்படுகிறது. காலையில் மருதப் பண் மாலையில் செவ்வழிப்பண் யாமத்தில் குறிஞ்சிப்பண் சந்தியில் காந்தாரப்பண் மத்தியானம் நட்டராகப் பண் பிற்பகல் கௌசிக பண் அந்திக்கு இந்தாளப்பண் அர்த்தசாமம் பஞ்சமப் பண் என்று பொழுதுக்கு ஒரு பண் பாடினார்கள்.

திசைக்கொரு பண் பாடுவது வழக்கம் அவை கிழக்கு - காள்தாரம், தென்கிழக்கு - கொல்லி, தெற்கு - கௌசிகம். தென்மேற்கு - நட்டபாடை, மேற்கு - சீகாமரம், வடமேற்கு - தக்கேசி வடக்கு - தக்கராகம், வடகிழக்கு - காதாரி ஆகும். பேச்சு பழக்க வழக்கங்கள் மங்கலமாக இடம் பெற்றன. விளக்கினை அணை என்று சொல்வதில்லை. அணை என்பதற்கு வேறு அர்த்தமும் உண்டு என்பதனால் விளக்கினை நிறைத்தும் விடு என்பார்கள். பொருள் இல்லை என்றால் இல்லை என்று கூறமாட்டார்கள். இப்பொழுதுதான் சமைந்து விட்டது என்பர். மரண வீட்டில் சென்று வருகிறேன் என்று கூறமாட்டார்கள். செல்கிறேன் என்பார்கள். திருமண வீட்டில் போய் வருகிறேன் என்பர். இறந்துவிட்டார் என்று கூட கூறுவது குறைவு. சிவகதி சேர்ந்துவிட்டார் என்றே தெரிவிப்பார்கள். மங்கைக்கு முதல் தீட்டு வந்தால் பூப்படைந்துவிட்டாள் என்று கூறுவார்கள். சூதகம் அல்லது மாதவிலக்கு வந்துவிட்டது என்று சொல்ல மாட்டார்கள்.

வேதனைகளை தணிக்கவும், நோய்களை நீக்கவும் பண் பாடினார்கள். மலைபடுகடாம் என்று நூலில் வீரமகளிர் போரிலே வீரர்களுக்கு ஏற்பட்ட புண் ஆறவும் வேதனை தணிக்கவும் பண்பாடினார்கள். இதனை மறப்புண் காத்தல் என இலக்கியம் குறிப்பிடுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொரிவரிபாய்தன கொழுநர் மார்பின்
நெடுவசி விழுப்புண் தணிமார் காப்பென
வழல் வாழ் கூந்தல் கொறச்சியர் பாட

தெய்வத்தமிழ் பாடி சம்பந்தர், அப்பர், மணிவாசகர், சுந்தரர் அற்புதங்கள் அநேகம் நிகழ்த்தினர். தமிழ் உயிருள்ள மொழி. நக்கீரர் அகத்தியர் தமிழ்மேல் ஆணை எனறு பாடி இறக்கவும் பின் உயிர் பெற்றெழவும் தமிழ்ப்பண் பாடினார். கனியிருக்க, காய் கவரலாமா? போரில் வெற்றி கிடைக்க வேண்டி படையணி வகுக்கும் போது பண்பாடுவார்கள்.

இராவணன் தமிழ்ப்பண் பாடி மலையிலிருந்து தப்பினான். சம்பந்தர் பாடி படிக்காசு பெற்றார். பொற்றாளம் பெற்றார். ஔவைப் பாட்டி பாடி பட்டமரம் தழைக்க வைத்தார். அருணகிரி பாடிய தமிழ்ப்பாடல் முருகனை அழைத்தது. அபிராமிபட்டர் பாடிய தமிழ்ப்பண் அமாவாசையில் நிலவெறிக்கச் செய்தது. அருமருந்த தமிழ்ப் பண்களை மறந்து செத்த மொழிச் சுலோகங்களைப் பாடலாமா? கோவில்கள் மூடப்பட்டு வர தமிழ்ப் பண்கள் மறைந்து வருவதே காரணமாக இருக்கலாம் அல்லவா? திருமுறைகளை அழிக்கச் சதி செய்தார்கள். இறைவன் சித்தம் அது தமிழருக்கு மீண்டும் கிடைத்தது. தமிழ்ப் பண்களின் வல்லமைகளை சொல்லால் அளவிட முடியாது.

அன்றாட கடமைகளையும் பண்பாடி செய்தார்கள். வயல் வரம்பு வேலைகளையும் பள்ளுப்பாடிச் செய்தார்கள். பண்களும், பண்ணுக்குரிய பாடல்களும் வாழ்க்கையில் பண்பாடும் வழக்கங்களும் மிகவும் அருகிக் காணப்படுகின்றன. கலைகளின் ஒழுக்கம் கலாசாரமாகும். தமிழ்ப்பண் பாடுவது தமிழ்ப்பண்பாடு ஆகும். பண்பாடும் வழக்கம் மற்ற இனங்களின் இவ்வாறு வளர்ச்சியடையவில்லை.

இறைவன் "அர்ச்சனை பாட்டேயாகும். மண்மேல் கொற்றமிழ் பாடுக" என்று சுந்தரருக்குத் திருவாய் மலர்ந்தருளினார். சைவமும் தமிழும் தமிழர்களின் இருகண்கள். ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதவையாகும். நாயன்மார் பண்ணோடு இசைபாடினார்கள்.

காந்தாரப் பண்பாடி - வெப்பம் தணிந்தது
கொல்ல பண்பாடி - வேதனை போக்கியது
கௌசிகப் பண்பாடி - நோய் நீங்கிற்று

தமிழ்ப்பண் பாடி வாழ்க்கையில் எல்லாக் கடமைகளையும் செய்வதே பண்பாடு ஆகும். தமிழ்ப்பண் பாடி வேலை செய்வது தமிழ்ப் பாண்பாடு ஆகும். பண்பாடுதல் தமிழருக்கு மட்டுமே உரிய ஒரு தனி மரபு. பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்று பண்பினால் பாட அறிந்து ஒழுகுதல் பண்பாடு என கலித்தொகை தெரிவிக்கிறது. எண்ணம் பாடல் செயல் இணைத்து வழிவழியாக தொடர்ந்து வருகிற மரபு பண்பாடு.

**(நன்றி ஒலை ~ மார்சு 2004)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரராகிவிட்ட தீவக வேலணை அறிஞர் - கவிஞர்
## திரு. தில்லைச்சிவன்

பேராசிரியர் திரு. இரா. சிவச்சந்திரன் கலைப்பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### இலக்கிய கர்த்தா மரணிப்பதில்லை

வேலணை மண்ணை நேசித்து மக்களை வழிநடத்தி பொருளாதார சமூக மேம்பாட்டிற்காக உழைத்த உன்னதமானவர்கள் எம்மிடம் தமது "மாண்பை" விட்டு மறைகின்ற சோகம் சமீபகாலமாக அடிக்கடி நிகழ்வது துயரம் தரும் நிகழ்வுகளாகும். ஓய்வு பெற்ற அதிபரும் ஆசிரியருமான உயர்திரு தி. சிவசாமி (தில்லைச்சிவன்) அவர்களின் மறைவும் இத்தகையதே.

வெள்ளை வேட்டி, சால்வை அணிந்து தம் வெள்ளை உள்ளத்தை அதனூடே வெளிக்காட்டி எமது கிராமத்தின் பொருளாதார, சமூக, கல்வி, சமய மேம்பாட்டிற்காக உழைத்த உத்தம ஆசிரியர் குழாமைச் சேர்ந்தவர்கள் பாடசாலையில் மாத்திரம் ஆசிரியராக பணியாற்றவில்லை. மொத்தக் கிராமிய சமூகத்திற்குமே ஆசிரியராகி - குருவாகி வழிநடத்தியவர்கள். கிராமத்தின் மொத்த மேம்பாட்டிற்காக உழைத்தவர்கள். அந்த வெள்ளை வேட்டி ஆசிரியர் பரம்பரையின் இறுதி வாரிசாக இருந்த மிகச் சிலரில் ஒருவரான உயர் திரு. தி. சிவசாமி அவர்களின் மறைவு ஆற்றொணாத சோகத்தை எனக்கு ஏற்படுத்திற்று.

ஆசிரியர் சிவசாமியை அறிந்தைவிட " தில்லைச் சிவனாக" அவரை அறிந்ததே அதிகம். எமது இளமைக் காலத்தில் இலக்கியத்திற் கொண்ட ஆர்வம் காரணமாக தில்லைச் சிவனுடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அறுபதுகளில் யாழ்ப்பாண இலக்கிய உலகில் ஒரு விழிப்பு ஏற்பட்டது. பல்வேறு இடங்களில் சங்கங்கள் அமைத்து இலக்கியம் வளர்த்தனர். தமிழ் மொழிப் பற்றும், சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளும் இதற்கு ஏதுவாக அமைந்தன.

அக்காலத்தில் நான், முகிலன், சரவணையூர் மணிசேகரன், ஆ. சண்முகலிங்கம், க. சட்டநாதன் போன்றோர் தில்லைச் சிவன் அவர்களின் வழிகாட்டலில் வேலணையில் மறுமலர்ச்சிக் கழகம், தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கம் போன்ற அமைப்புக்களை ஏற்படுத்தி தமிழிலக்கியம் வளர்த்தோம். இவ் அமைப்புக்களுக்குத் தலைவராக இருந்து வழிகாட்டியவர் மூத்த எழுத்தாளராக - கவிஞராக விளங்கிய தில்லைச் சிவன் அவர்களே. இதனூடாகவே எம்மில் பலர் கல்வியிலும் இலக்கியத்திலும் தமிழ் மொழி வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டு முன்னேற்றம் அடைந்தோம். இந்த வகையில் எனக்கு இளமைக் காலத்தில் "தில்லைச் சிவன்" திசை காட்டிய குருவாக விளங்கினர் என்றால் அது மிகையான கூற்றன்று.

தில்லைச் சிவன் அவர்கள் தமிழ்ப் பற்று மிக்கவர். தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜையாக இருப்பதை உணர்ந்து கொதித்தெழுந்தவர். தமிழரசுக் கட்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து தொண்டாற்றியவர். தமிழர் தம் போராட்டத்திற்கு முன்னோடியாக எமது கிராமத்தில் மிளிர்ந்தவர். பெரியார் க. பொ. இரத்தினம் அவர்களுடன் இணைந்து திருமறை விழாக்கள், சிலப்பதிகார விழாக்களை எமது மண்ணில் நிகழ்த்திக் காட்டியவர். கிராமிய மட்டங்களில் சமூக மேம்பாட்டிற்காக உழைத்தவர். இவை மாத்திரமன்றி அவர் சிறந்த விவசாயியாகக் கூட விளங்கியவர். தோட்டச் செய்கையில் நவீன விவசாய முறைகளை அறிமுகப்படுத்தியதோடு ஏனையோரும் அதனைப் பின்பற்ற வழிகாட்டியவர். ஈழத்தமிழ் ஆக்க இலக்கியத்திற்கு "தில்லைச் சிவன்" ஆற்றிய பணி வியக்கத்தக்கது. தன் இளமைக் காலத்தில் கவிதையூடாகப் பட்டணத்து மச்சியை கிராமத்தில் உலாவவிட்ட அவர் கனவுக்கன்னி, தாய், தில்லைச்சிவன் கவிதைகள், நான், பாப்பாப்பாட்டு. நாவலர் வெண்பா போன்ற கவிதை நூல்களை எமக்களித்துள்ளார். வேலணையில் பிரசித்தி பெற்ற கோவில்கள் மேல் ஊஞ்சல் பாடல் பாடியுள்ளார். வேலணை வாழ் மக்கள் பலருக்கு கவிதையில் "கல்வெட்டு" செதுக்கியவர். பல்துறை இலக்கிய ஆளுமை கொண்ட "தில்லைச்சிவன்" "காவல் வேலி" என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுதி ஒன்றினையும், வேலணைத்தீவின் புலவர் வரலாறு, செல்வா காவியம், பெரியார் க. பொ. இரத்தினம் பற்றிய நூல் என்பவற்றையும் எமக்களித்துள்ளார். எமது கிராமத்தில் நிலவிய கர்ண பரம்பரைக் கதைகள் பலவற்றை "அந்தக் காலக் கதைகள்" எனும் தலைப்பில் மிக்க ரசனையுணர்வுடன் படைத்து அக்கதைகளுக்கு இறவா வரம் அளித்துள்ளார். அவர் படைத்த இலக்கியங்கள் பல்கலைக்கழக ஆய்வுக்குரியன. தக்கவர் பயன்படத்தித் தகமை பெறுக.

சிவசாமியாக தன் குடும்பத்தில் கடமைகளை பூரண நிறைவுடன் ஒப்பேற்றி வைத்து தன் பிள்ளைகளை அவையத்துள் முந்தியிருக்க செய்து; தில்லைச் சிவனாக ஈழத்து இலக்கியத்திற்கு தன் படைப்புகள் மூலம் ஒளி பாச்சியவர். தில்லையில் நடனம் புரியும் சிவனின் பாதங்கள் சென்றடைந்துள்ளார். பூரண நிறைவுடன் இப் பூவுலகிலிருந்து விடைபெற்ற அவர் ஆன்மா சாந்தியுறுவதாக தமிழ் இருக்கும் வரை அவர் படைத்தளித்த இலக்கியத்தினூடே அவர் வாழ்வார்.

**உங்களின் ஆக்கங்களை வரவேற்கிறோம்.**

**முகவரி: உலகத்தமிழர் குரல்**
**"பரமநாதன் ஹவுஸ்"**
**மானிப்பாய் வீதி,**
**தாவடி. கொக்குவில்**
**இலங்கை.** -ஆசிரியர்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மறை என போற்றப்படும் மும் மணிகள்

**திரு. க. பொன்னம்பலம் J.P**
**புங்குடுதீவு, தீவகம், இலங்கை.**



உலகிலே தமிழ் இனத்திற்கு ஒப்பற்ற சிறப்பும் பெருமையும் சேர்ந்தது தமிழ். உலக மொழிகளிலே தமிழ் மொழியைத் தான் மூன்றாக வகைப்படுத்திச் சிறப்பித்து முத்தமிழ் என்றார்கள்.

சைவம் - தமிழ் ஆகிய இரு பெருந்துறைகளில் தலை சிறந்த நூல்களெனக் கருதப்படுபவை மூன்று அவை திருக்குறள், திருவாசகம், திரும்திரம். மும் மணிகளென ஒளிரும் இம் முத்தமிழ் நூல்கள் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படும் தத்துவங்களைக் கொண்டு இலங்குபவை.

1330 குறட்பாக்களைக் கொண்டு திகழும் நூல் தான் திருக்குறள். இது திருவள்ளுவப் பெருந்தகையின் பேர் ஆற்றலை உலகுக்கு எடுத்து கூற ஏதுவாகவுள்ளது. இது பொய்யா மொழி, முப்பால், முப்பானூல், உத்தர வேதம் தெய்வ நூல், வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொது மறை என போற்றிப் புகழாத பழந் தமிழ்ப் புலவரோ இல்லை.

இந்நூலின் கருத்துக்களைத் தமது நூலில் கையாளாத ஒரு தற்காலத் தமிழ்ப் படைப்பாளியோ இல்லை அது போன்றே திருக்குறளைப் புகழ்ந்து போற்றாத மேனாட்டறிஞரோ அந்நூலை மொழி பெயர்க்காத உன்னத உலக மொழிகளோ இல்லை. இந்நூலின் பெருமையை அறிந்த மேல் நாட்டு அறிஞர்கள் நூற்றுக் கணக்கான மொழிகளில் மொழி பெயர்த்து அதன் உன்னத பயனை அனுபவிக்கிறார்கள்.

இந் நூலின் பெருமையை நோபல்பரிசு பெற்ற ஜெர்மனியராகிய அல்பாட் சுவைட்சர் Albert Slwitzer என்பார் உன்னதமான ஓர் உலகியல் அறிவுக் களஞ்சியமாகத் திகழும் திருக்குறள் நூல் போல் உலகில் வேறு எந்த நூலும் தோன்றியதே இல்லை என்று மிக ஆனித்ததரமாக அறிவிக்கின்றார். அவர் ஆங்கிலத்தில் "Hardly there exists in the literature of the world a collection of maxims in which we find so much lofty wisdom." என்று அவ்வறிஞர் திருக்குறளை வானளாவப் போற்றுகின்றார்.

திருவாதவூரர், மாணிக்கவாசகர் அவர்களால் கல்லையும் கனிய வைக்கும் பேராற்றல் மிக்க திருவாசகத்தினை அருளிச் சைவத்தையும், தமிழையும் ஒருங்கிணைத்து அழியா மகத்தான தேன் சொரியும் திருமறைகளை வாக்கால் பாடி அருளினார்.

திருவாதவூரர் சொல்ல அம்பலவர் தாமெழுதும் திருவாசகத்தை தெளிந்தால் - கருவாம்
பவ கதியும் நீங்கிப் பரமருளாலே
சிவ கதியும் உண்டாம் சிவம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவாசகம்:-** மாணிக்க வாசகர் வாக்கிலே சிவனே வாக்கு நிலையில் நின்றும், குரு மணியாக மனித வடிவத்திலும் தோன்றியும் மாணிக்க வாசகர் பாட சிவனே எழுதியதுதான் திருவாசகம் என்னும் தேன். இது தில்லைமூவாயிரம் பேர் அறிய எழுத்தில் வடிவமைக்கப்படடவை. தில்லையில் தில்லை மூவாயிரமவர்கள் இதன் பொருள் என்ன என்று கேட்டார்கள். அப்பொழுது மாணிக்க வாசகர் கூறினார் இறைவனை,

குறைவு இலா நிறைவே கோது இலா அமுதே ஈறு இலாக் கொழும் சுடர் குன்றே
மறையும் ஆய் மறையின் பொருளும் ஆய்வந்து என் மனத்திடை மன்னிய மன்னே
சிறை பெறாநீர் போல் சிந்தை வாய்ப்பாயும் திருப்பெருந்துறை உறை சிவனே
இறைவனே நீ என் உடல் இடம் கொண்டாய் இனி உன்னை என்னிரககேனே

என ஆயிரக்கணக்கான தேன் சொரியும் தோத்திரங்களை பாடி எமக்கு தந்து விட்டு அங்கு தோன்றிய சோதிப் பிளம்பில் மறைந்து இறைவனுடைய பொன் மலருள் ஒன்றானார்.

திருமந்திரம் என்னும் தெய்வீக நூல் திருமூலர் வாக்கிலே இருந்து வெளிப்பட்டவை. இவை இறைவாக்காகக் கொள்ளல் வேண்டும் திருமந்திரம் அண்ட சராசங்களின் இயக்கத்திற்கு மூலகாரண பொருளாகும்.
இவர் அன்பையே சிவமாகக் கண்டு முத்திக்கு வித்து அன்பே! என்று

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பரே

என்று தெளிவு படுத்தியவர்

உடல் கூற்றையே இறைவன் இருப்பிடமாக கூறியவர்

உள்ளம் பெரும் கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணி விளக்கே

இவர் அருளிச் செய்த திரு மந்திர மாலை மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. இவரது நூலில் அறம் பேசப்படுகிறது, தத்துவம் பேசப்படுகின்றது, சமயம் பேசப்படுகின்றது, சிவநெறியே சிறந்தது என உறுதிப்படுத்தி நிற்கின்றது. ஏன் இந்நூலில் அக்காலத்திலிருந்த சமயங்கள் முடிவுகள் எல்லாம் எளிமையான முறையில் விளக்கப்பட்டுள்ளன. ஏனைய திருமுறைகளைப் போல வழிபாட்டுக்குச் சிறப்பிடம் கொடுக்காது சாதனைக்கு சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதலின் இதனையும் நாம் வாழ்வுக்கு வழிகாட்டியாகக் கொள்ளலாம்.

**எமது நூலகத்துக்கு அறிஞர்கள் எழுத்தாளர்கள் உங்களின் நூல்களை அனுப்பியுதவுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவையில் 09வது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு

09ஆவது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு புதுவையின் ஆந்திரா மகா சபாவில் 10.07.2004 அன்று தொடங்கியது. திருமதி. சிவா செல்லையா, இலட்சுமிநாராயணன் குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தனர். தமிழரின் கீதம் இசைக்க தமிழர் கொடியை உலகத்தலைவர் தமிழ் செம்மல் சி. செல்லையா அவர்கள் ஏற்றி வைத்து தலைமையுரை நிகழ்த்தினார். உ.த.ப.இ இந்தியக் கிளைத்தலைவர் கோபுடோ ஏ.எஸ் கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். புதுவை மாநில கல்வி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இலட்சுமி நாராயணன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் பெ. சந்திரசேகரன் மாநாட்டு சிறப்பு மலரை வெளியிட்டார். பாவேந்தரின் மகன் தமிழ் மாமணி மன்னர் மன்னன், தென்னாபிரிக்கா கிளைத்தலைவர் கிறிஸ்கிஸ்ரன், இலங்கைத் தலைவர் ஆ. சண்முகலிங்கம், பத்திரிகையாளர் தணிகைத்தம்பி, இந்தியக்கிளை இணைசெயலாளர் சிவசு போன்றோர் வாழ்த்துரை வழங்கினர்.

தொடர்ந்து தமிழர் சமயமும் வழிபாடும் எனும் தலைப்பில் திருவாடுதுறை ஆதின வைச சித்தாந்த நேர்முகப்பயிற்சி மையம் திருவாடுதுறை மெஞ்ஞானவள்ளல் கு. வைத்தியநாதன் ஈசான தேசிகர் தலைமையில் யாழ் பல்கலைக்கழகத் சைவச் சமயத்துறை தலைவர் பேராசிரியர் நாச்சியார் செல்வநாயகம் ஹைதராபாத் பேராசிரியர் முத்துசாமி குரு. எம். வீரப்பன் போன்றோர் உரை நிகழ்த்தினர். தமிழர் பண்பாடு குறித்து முனைவர் கோதண்டராமன், டாக்டர் பக்தவச்சலபாரதி முத்து நிலவன், தமிழ் இலக்கியம் தலைப்பில் முனைவர் அறிவு நம்பி புலவர் சீனுராமச்சந்திரன், முனைவர் சம்பத் போன்றோர் உரை நிகழ்த்தினர். அறிவியல் தமிழ் எனும் தலைப்பில் மணவை முஸ்தபா நெல்லை சு. முத்து பத்திரிகையாளர் மாலன், க. நடராஜன் ஆகியோர் உரை நிகழ்த்தினர் இறுதியில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மறு நாள் 11.07.2004 அன்று அந்தமான் சுப சுப்பிரமணியனார் அரங்கில் எதிர்காலத்தமிழ் எனும் தலைப்பில் இலக்கணச்சுடர் திரு முருகன், டாக்டர். கனகராசும் தமிழரும் தாராள மயமாக்கலும் எனும் தலைப்பில் முனைவர். ப. வெங்கடேஷ், ப. ஆத்ரேயா, முனைவர், க. பஞ்சாங்கம், ச. தமிழ்செல்வன் போன்றோரும் புலம் பெயர்ந்த தமிழர்கள் எனும் தலைப்பில் கிறிஸ் கிஸ்ரன் திருமதி அன்யெலாசெட்டி, டாக்டர் லிக்டர் பிகராடோ பேராசியை கலைவாணி இராமநாதன், தமிழ் வளர்த்த கலைகள் எனும் தலைப்பில் பேராசிரியர் வைத்தியலிங்கம், கலைமாமணி கே.ஏ. குணசேகரன், டாக்டர் அரிமளம் பத்மநாபன், பேராசிரியர் குடவாயில் பாலசுப்பிரமணியன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். கவியரங்கத்தில் கலைமாமணி புலவர் நாகி கவிஞர் கல்லாடன் கவிஞர் பூங்கொடி பராங்குசம், கவிஞர் மு. முருகேஷ், கவிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹேமலதா கவிஞர் நாகசுந்தரம் கவிஞர் சிவசு கவிஞர் மோ. மைக்கேல் பாரடே போன்றோர் கவிபாடி மகிழ்வித்தனர். இறுதியில் மொழியியல் தொடர்பாக பேராசிரியர் மருதநாயகம், ப. அருளி, ராமச்சந்திரன், கு. அருள்மணி தென்கச்சி கோ. சுவாமிநாதன், முருகேசன், கோவிந்தசாமி போன்றோர் உரை நிகழ்த்தினர்.

இம் மாநாட்டில் அந்தமான் தமிழர் சங்கத்தலைவர் ஏ.கே. போஜராஜன், தொழிலதிபர் ஆர். தாமோதரன் அந்தமான் கிளை உ.த.ப.இ அமைப்பாளர் சுப. கரிகால்வளவன் போன்றோர் கலந்து கொண்டனர். மாநாட்டு தீர்மானங்களில் அந்தமானில் தமிழர்கள் குறித்த சிக்கல்கள் குறித்தும் இந்திமொழி திணிப்பு குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது. அத்தோடு அடுத்த உலகத் தமிழ்ப்பண்பாட்டு மாநாட்டை அந்தமானில் நடத்திடவேண்டும் என அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் கேட்டு கொண்டதற்கிணங்க மாநாட்டு நாயகன் செல்லையா அவர்கள் ஏற்றுக் கொண்டு அடுத்த மாநாட்டை அந்தமானில் நடத்த ஒப்புதல் அளித்துள்ளார்.

**நன்றி. சுப. கரிகால்வளவன்**
**அந்தமான் முரசு**
**17.07.2004**



**பாண்டிச்சேரியில் நடந்த உ.த.ப இயக்கத்தின் 09 ஆவது உலக மாநாட்டில் அகிலத்தலைவர் திரு.சி. செல்லையா அவர்கள் உரையாற்றுகிறார். மேடையில் இடமிருந்து வலமாக திரு.N. இராமன் (கனடா), மாண்புமிகு இலட்சுமி நாராயணன் அவர்கள் புதுவை கல்வி, சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோர் மேடையில் உள்ளனர். நிற்பவர் அறிஞர் திரு. எஸ. நாகேஸ்வரன் அரங்கச் செயலாளர்.**



**உ.த.ப. இயக்கத்தின் இலங்கைத் தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் பாண்டிச்சேரியில் நடந்த 09ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டில் விருது பெறுகின்றார். கௌரவ விருது வழங்குபவர் திரு. A.S. கிருஸ்ணமூர்த்தி (கோபுடோ) அருகில் உ.த.ப. இயக்க அகிலத்தலைவர் திரு.சி. செல்லையா காணப்படுகிறார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் புதிய பேரவை மத்திய குழு விபரம்.

சமீபத்தில் பாண்டிச்சேரியில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 09 ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டில் 12-07-2004 இல் கூடிய சர்வதேசப் பேரவைக் கூட்டத்தில் பின் வருவோர் புதிய மத்திய குழுவின் அலுவலர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

1. அகிலத் தலைவர்: திரு. சி. செல்லையா - கனடா
2. துணைத் தலைவர்கள்: திரு. செ. செகராசசிங்கம் - கனடா
   திரு. கிரிஸ் கிஸ்ரன் - தென்னாபிரிக்கா.
3. பொதுச் செயலாளர்:- திரு. ஆ. சண்முகலிங்கம் - இலங்கை
4. செயலாளர் : திரு. எஸ். சிவசு - இந்தியா
5. பொருளாளர்: திரு. என். நந்தகுமார் - கனடா
6. உதவிப் பொருளாளர்: திருமதி. ஜி. பொன்னி - மலேசியா
7. சர்வதேசத் தமிழக் கல்விப் பொறுப்பாளர் பேராசிரியர்.திரு. அ. சண்முகதாஸ் - இலங்கை
8. சர்வதேச மக்கள் தொடர்பாளர். திரு. நடா - ராஜ்குமார் - கனடா
9. உதவியாளர்: புதுவை - N. இராமன் - கனடா
10. யூனெஸ்கோ தொடர்பாளர்: திரு. லிக்ரர் பிகராடோ - கனடா

## உதவித் தலைவர்கள்

11. பண்டிதர் கு. ஜெயக்குமார் - டென்மார்க்
12. திரு. K. சிவபாலன் - நியூசீலந்து
13. திரு. S. மாரிமுத்து - மியான்மார் ( பர்மா)
14. திரு. செ. பரமநாதன் - இலங்கை (யாழ்)
15. திரு. மு. மணிவெள்ளையன் - மலேசியா
16. திரு. பொ. முருகவேள் - நோர்வே
17. திரு. S. தியாகலிங்கம் - நோர்வே
18. திரு. சிவா. கணபதிப்பிள்ளை - கனடா

## பொதுக் குழு உறுப்பினர்கள்

19. திரு. தேவராசா - கனடா
20. திரு. சி.வ. ஆறுமுகசாமி - இலங்கை (யாழ்)
21. திரு. கிஸ்ணமூர்த்தி - இந்தியா
22. திரு. மோ. செஸ். பரடே - இந்தியா
23. திரு. விஸ்வலிங்கம் - ஜேர்மனி
24. திரு. கரிகால்வளவன் - அந்தமான்
25. திரு. க. பொன்னம்பலம் - இலங்கை (யாழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தா வைத்தியம்

பாரிசவாதம், தொய்வு, மனநோய், நரம்புத் தளர்ச்சி,
இருதயநோய், நீரிழிவு, சிறுநீரக அழற்சி, பாலியல்
பலவீனம், கெற்பவாயு, குழந்தை நோய்
வெண் புள்ளி, சோரியாசிஸ் போன்ற நோய்களுக்கு
மருந்துகள் எண்ணெய்கள்
பெற்றுக் கொள்ளலாம்.

## பேரறிஞர் டாக்டர் க. பாலசுப்பிரமணியம்

**சித்தா நிபுணர், சிறப்பு ஆலோசகர்**

12/1, 57 வது ஒழுங்கை
கொழும்பு - 06
தொ. 011 - 250 3775

கிளை - சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம்
காங்கேசன் வீதி, சுன்னாகம்
இலங்கை.

தொ.பே.இல. 0776181988

ஒவ்வொரு மாதமும் நாலாவது வாரம்
சுன்னாகத்திலும் ஏனைய நாட்களில்
கொழும்பிலும் சந்திக்கலாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PRIMA - பிறிமா

## விநியோகஸ்தர்கள்

பிறிமா

நூடில்ஸ் வகைகள்

பிறிமா

மரக்கறி எண்ணெய்

பிறிமா

மா ஆட்டா மா, ரவ்வை

பிறிமா

இறைச்சிக் கோழி

**PRIMA SAUSAGES, MEAT BOLES**
**PRIMA SOAP**

**144, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிட

# ஆலோசனைகள்

உங்களின் ஜாதகக் குறிப்புகளை ஆய்வு செய்து பலாபலன்களுடன் ஆலோசனை வழங்கப்படும். தீராத பிரச்சினைகள் தீர, தொழில் வியாபாரம் ஆரம்பிக்க பெயர், எண், மாற்றி அதிஷ்டசாலியாக விவாக காலம் பற்றி அறிய சுப மங்களகாரியங்களுக்கான நாள் எடுக்க, மற்றும் ஜாதகர்களின் பலாபலன்கள் அறிய எம்முடன் தொடர்பு கொள்ளலாம். ஜாதகக் குறிப்புகளும் (உள்நாட்டு - வெளிநாட்டு) எழுதி வழங்குவோம். தொடர்பு


முகவரி:- சோதிட ஞானி

ஆ. சண்முகலிங்கம்<br>
(C/o A. GANESH Rtd. G.S.O)<br>
URELU EAST<br>
CHUNNAKAM<br>
SRI LANKA.<br>
T.P - 0094 - 21 - 222 - 3273<br>
FAX - 0094 - 21 - 222 - 3294

கனடா தொடர்பு:- K. KANDASAMY<br>
4432 AV VAN HORNE<br>
MONTREAL Q.C<br>
$H_3 S_1 S_1$<br>
CANADA.<br>
T.P 514 - 3415471





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவரசி

## சேலைச் சோலை



- சேட்டிங் – சூட்டிங்
- சேட்ஸ்
- ஸ்கேட் & பிளவுஸ்
- கவுண்
- சல்வார் கிற்
- இந்தியன் சாரி வகைகள்
- பேபி சூட்
- சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற றெடிமேட் ஆடைகள்

சேலைகளின் சோலை
பட்டுப்பிடவைகளின் சாம்ராஜ்யம்

57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 - 2222503


ஸ்ரீராம் பிறின்ரேர்ஸ், 250 பலாலி வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org